Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 14 புதன்கிழமை (30.11.2011) பக்கங்கள் 16 ஓசை – 60


ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1049)




நடவடிக்கைக்கு தயார் (08)



மீண்டும் சமரவீர (07)



இளைஞர்களுக்கு அழைப்பு (12)



நகரும் தேவாலயம் (13)

# நோர்வேயின் அறிக்கையை நிராகரித்தார் யசூசி அகாஷி



(கொழும்பு)

இணைத்தலைமை நாடுகளில் ஒன்றாக செயற்பட்ட ஜப்பான், இலங்கையின் அமைதி முயற்சிகளில் வகித்த பங்கு தொடர்பாக நோர்வேயால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள விமர்சனத்தை ஏற்றுக் கொள்ள முடியாதென யசூசி அகாஷி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

2009 இல் போரின் இறுதிக்கட்டத்தில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை பற்றிய விபரங்களை அறிந்து கொள்வதற்கு வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படும் கணக்கீடு உதவும்.

போரின் இறுதிக்கட்டம் பற்றிய துல்லியமான தகவல்களைத் திரட்டுவதற்கு இந்தக் கணக்கீடு உதவியாக அமையும். நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் போருக்குப் பிந்திய நல்லிணக்க முயற்சிகளில் இலங்கை முன்னே செல்ல முடியும். நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்காக ஜப்பான் (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழு அறிக்கை நாடாளுமன்றுக்கு

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை டிசம்பர் மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாகக் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 20 ஆம் திகதி உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது.

அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு (15 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் பிரச்சினைக்கான தீர்வை இலங்கை அரசே வழங்க முடியும்

### மலேஷிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைகளுக்கு இலங்கை அரசாங்கத்தினால் மட்டுமே தீர்வு வழங்க முடியும் என இரண்டு மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

எம்.மனோகரன், எஸ்.ராமகிருஸ்ணன் ஆகிய இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறு தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

எந்தவொரு நாடோ அல்லது அரசாங்கமோ தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முடியாது.

சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளுக்கு முன்னுரிமை அளித்து இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தினால் மட்டுமே (15 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்காடு, வளலாய் பகுதிகளில் 21 வருடங்களின் பின் மீள்குடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளின் ஒரு கட்டம் நேற்றும் இடம்பெற்றது.

இதன்படி 21 வருடங்களின் பின்னர் யாழ்., கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சில கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அவர்களது சொந்த இடங்களில் நேற்றைய தினம் மீளக் குடியமர்த்தப்பட்டனர்.

வளலாய் பிள்ளையார் கோவிலில் இடம்பெற்ற விசேட பூஜைகளின் பின்னர் கோப்பாய் பிரதேச செயலாளர் தலைமையில் மக்களை மீளக்குடியமர்த்தும் நிகழ்வு இடம்பெற்றது.

(15 ஆம் பக்கம் பார்க்க)



## அரசின் செயலை கண்டித்து ஐ.தே.க. ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தலைநகர் கொழும்பில் பாரிய எதிர்ப்பு போராட்டமொன்றை நேற்றையதினம் நடத்தியது.

நேற்றையதினம் தேசிய எதிர்ப்புத் தினமாக பிரகனடப்படுத்திய நிலையிலேயே தலைநகர் கொழும்பிலுள்ள ஹைட்பாக் மைதானத்தில் இந்த போராட்டமும், கண்டனக் கூட்டமும் நடத்தப்பட்டது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற் போன மாணவன் வீடு திரும்பியதாக தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

காணாமல் போயிருந்த யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீட இரண்டாம் வருட மாணவன் வேதாரணியம் லத்தீஸ் நேற்று வீடு திரும்பியிருப்பதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலய அதிகாரி ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதடியிலுள்ள சித்த மருத்துவ பீடம் அமைந்திருக்கும் பகுதியிலிருந்து குறித்த மாணவன் காணாமல் போயிருந்தார்.

இவ்விடயம் குறித்து உறவினர்களால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திலும் இலங்கை மனித உரிமைகள் யாழ். காரியாலயத்திலும் முறையிடப்பட்டிருந்தது.

நேற்றைய தினம் அம்மாணவன் (15 ஆம் பக்கம் பார்க்க)

### நாடாளுமன்றில் உரையாற்ற அனுமதி மறுப்பு

## கழுத்துப் பட்டியை கழற்றியபடி வெளிநடப்புச் செய்தார் ரணில்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் உரையாற்ற அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கொமன்வெல்த் நாடாளுமன்ற ஒன்றியத்தின் இலச்சினை பொறிக்கப்பட்ட கழுத்துப்பட்டியை கழற்றி எதிர்ப்புத் தெரிவித்தவாறு வெளிநடப்புச் செய்துள்ளார்.

நிலையியல் கட்டளையின் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் நேற்று சிறப்பு அறிக்கை ஒன்றை வாசிக்க ரணில் விக்கிரமசிங்க முற்பட்டார். அதற்கு அரச தரப்பில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## தற்போதைய அரசியல் நிலை கூட்டமைப்பு – அகாஷி பேச்சு

(கொழும்பு)

தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றைய தினம் இடம்பெற்றது.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நேற்று முற்பகல் 11.30 தொடக்கம் 12.30 மணிவரை மதியபோசனத்துடன் கூடியதாக இச்சந்திப்பு அமைந்திருந்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது இலங்கையின் அரசியல் நிலைமைகள், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை முன்வைப்பதில் அரசாங்கம் (15 ஆம் பக்கம் பார்க்க)

# வாக்காளர் பதிவினை மேற்கொள்ள இன்றைய தினம் இறுதி நாளாகும்

2011 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களைப் பதிவு செய்வதற்குத் தவறியவர்கள் தமது உரிமைக் கோரிக்கை விண்ணப்பங்கள் மூலம் வாக்காளர்களாக பதிவுசெய்வதற்காகக்கான கால அவகாசம் இன்றுடன் முடிவடைகின்றது. எனவே வாக்காளர் பதிவினை இதுவரை மேற்கொள்ளாத வர்கள் இன்றைய இறுதி நாளில் தமது வாக்காளர் பதிவினை மேற்கொள்ளுமாறு யாழ் உதவித் தேர்தல ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வாக்காளர்களாகத் தம்மைப் பதிவு செய்யாதவர்கள் தமது பெயர்களை 2011 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் சேர்த்துக்கொள்ளக் கூடிய விதத்தில் தேர்தல் ஆணையாளரினால் விசேட மாக நவம்பர் இரண்டாம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையான கால எல்லை அறிவிக்கப்பட்டிருந்தது.

இக் காலப்பகுதியில் கடந்த 22 ஆம் திகதி வரை 7500 பேர் யாழ். மாவட்டத்தில் தமது உரிமைக் கோரிக்கை விண்ணப்பங்களைச் சமர்ப்பித் திருந்ததாக அவர் குறிப்பிட்டார். தொடர்ந்தும் பலர் தமது உரிமைக் கோரிக்கை விண்ணப்பங்களைச் சமர்ப பித்து வருகின்றனர். எனவும் இன்றைய இறுதி நாளைக்கருத்தில் கொண்டு தவறவிட்டவர்கள் தமது பதிவினை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

இன்றைய தினம் உரிமைக் கோரிக்கைக்கு விண் ணப்பித்தவர்களின் இறுதிக்கணக்கெடுப்பு மேற் கொள்ளப்பட்டு குறித்த காலப்பகுதியில் அவர்களுக கான விசாரணைகள் நடைபெற்று 2011 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் சேர்த்துக்கொள்ளப் படுவர் எனவும் யாழ். உதவித் தேர்தல் ஆணை யாளர் தெரிவித்தார். மேலும் பத்தாயிரம் பேரிற்கு மேற்பட்டவர்கள் தமது உரிமைக் கோரிக்கைக்கு விண்ணப்பிப்பர் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (பா)



கெமுனு 17 ஆவது படைப்பிரிவினால் அண்மையில் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. கரம்பன் பிரிவின் கொமாண்டர் லெப்டினன்ட் கேணல் ஏ.எம்.எ.எஸ்.பிரேம வன்ச தலைமையில் நடைபெற்றது. (85)

# வெள்ள நீரை வெளியேற்ற வாய்க்கால்கள் அமைப்பு

கடந்த சில தினங்களாக பெய்த கனமழை காரணமாக மீள்குடி யேற அனுமதிக்கப்பட்ட இளவாலை வடமேற்கு ஜே/222 கிராம அலுவலர் பிரிவிலுள்ள கிராமங் கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதில் வசந்தபுரம் கிராமத் தில் தேங்கி நிற்கும் வெள்ள நீரை வெளியேற்றி கடலிற்குள் விடுவ தற்காக மாதகல் - கீரிமலை பிர தான வீதியின் குறுக்காக வாய்க் கால்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இச் செயற்பாடுகளில் ஈ.பி.டி.பி. வலி. வடக்குப் பிரதேச அமைப் பாளர் அன்பு, கடற்படையினர், பிர தேச செயலர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் குறி த்த கிராம அலுவலர் அன்ரனி றோய் ஆகியோரின் வேண்டு கோளுக்கு இணங்க வசந்தபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கிராம மக்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

குறிப்பாகக் கடற்படையினர் தமது பைக்கோ இயந்திரத்தின் மூலம் வாய்க்கால் வெட்டும் பணியில் ஈடுபட்டனர். எனினும் தற்போது வாய்க்கால்கள் முழுமையாக அமைக்கப்பட்டுள்ளது.

வசந்தபுரம் கிராம மக்கள் வெள் ளத்தினால் தெல்லிப்பளை தென் னைவள கூட்டுறவுச் சங்கத்தி னால் புதிதாக அமைக்கப்பட்ட தொழிற்சாலைக் கட்டடத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் வாய்க்கால்கள் அமைக்கப்பட்டு வெள்ளம் வழிந்தோடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந் ததால் அம்மக்கள் தங்கள் இருப்பி டங்களுக்குத் திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (120)

## ஆலோசனைக் கூட்டம்

எதிர்வரும் தைத்திங்கள் 13, 14,15 ஆகிய திகதிகளில் பொங கல்விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஆலோச னைக் கூட்டமொன்று இன்று பிற் பகல் 3 மணிக்கு நாவலர் மண்ட பத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ் மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா தலைமை யில் நடைபெறவுள்ள இவ் ஆலோசனைக் கூட்டத்திற்கு பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் அழைக்கப்படவுள்ளனர்.

## கலந்துரையாடல்

மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தி தொடர்பான திட்ட மிடல் கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 3.00 மணியளவில் பாசையூர் புனித அந்தோனியார் குருமனை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

எனவே ஜே/65 கிராம அலு வலர் பிரிவைச் சேர்ந்த மக்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு தங்கள் ஆலோசனையை வழ ங்க முடியும் என்று யாழ். மாந கர முதல்வர் அறிவித்துள்ளார்.

# ரயில் தண்டவாளத்தை அறுத்தவர்கள் பொலிஸாரிடம் பிடிபட்டனர்



யாழ்ப்பாணம் - அரியாலை கிழக்குப் பகுதியில் வயல் பகுதி யின் ஊடாகச் செல்லும் ரயில் பாதையிலுள்ள தண்டவாளத்தை அறுத்து பழைய இரும்புக்கு விற்பனை செய்யும் நடவடிக்கை யில் ஈடுபட்டிருந்த மூன்று பேர் நேற்று முன்தினம் யாழ். பொலி ஸாரினால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அன்றைய தினம் மாலை வேளை யில் குறித்த பகுதியில் தண்ட வாளத்தை அறுத்தெடுக்கும் நடவடிக்கையில் இவர்கள் ஈடு பட்டிருந்தபோது அப்பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணு வத்தினரினால் இவர்கள் பிடிக் கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இவர்கள் மூவரும் யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று தடுத்துவைக்கப்பட்டிருந்ததுடன் இவர்கள் மீது யாழ். நீதவான் நீதிமன்றத்தில் வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

தற்சமயம் யாழ். குடாநாட்டில் இருந்து தென்பகுதிக்கு பழைய இரும்பு வியாபாரத்தில் பெரும ளவானவர்கள் ஈடுபட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (பா)

# வெள்ளக்காடாகியுள்ள பூநகரி - சங்குப்பிட்டி வீதி



(முழங்காவில)

தொடர்ந்து பெய்துவரும் மழை யால் குண்டும் குழியுமாக இரு ந்த ஏ-32 பூநகரி - சங்குப்பிட்டி வீதியில் பல இடங்களில் வெள் ளம் தேங்கியுள்ளது. பரமன்கி றாய் பகுதியில் 100 மீற்றர் நீளத் தில் ஒரு அடி உயரத்தில் வெள்ளம தேங்கி நிற்பதால் தினசரி யாழ்ப் பாணத்தில் இருந்து மன்னாரு க்குச் சேவையில் ஈடுபடும் பேரு ந்து சாரதிகள் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே பேருந்துகளைச் செலுத்துவதாகத் தெரிவிக்கின்றனர்.

வாகனங்கள் புதையுண்டால் போக்குவரத்துச் சேவை ஸ்தம் பிக்கும் நிலை ஏற்படலாம் எனவும், இதனைத் தடுக்கும் வகையில் உரிய பகுதியினர் விரைந்து நட வடிக்கை எடுக்கவேண்டும் என வும் கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது. (112)

# மீள் குடியேறிய மக்களுக்கு வாழ்வாதார உதவித்திட்டம்

வடமராட்சி கிழக்கில் மீள் குடியமர்ந்த மக்களின் நலன்கருதி வாழ் வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக பருத்தித்துறை கால்நடை வைத்திய அலுவலகத்தினரால் கால்நடைகள் மற்றும் கோழிக்குஞ்சு கள் வழங்கப்பட்டுள்ளன. வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஜே/427, ஜே/428, ஜே/430, ஜே/431 ஆகிய கிராம அலுவலர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட 60 பயனாளிகளில் ஒரு பயனாளிக்கு இரண்டாயிரத்து 400 ரூபா பெறுமதியான 20 ஒரு மாத கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் ஜே/427, ஜே/428, ஜே/431 ஆகிய கிராம அலுவலர் பிரிவு களில் 10 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு ஒருவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான 2 செம்மறி ஆடுகளும், 5 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு ஒரு பயனாளிக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு கடா ஆடும் வழங்கப்பட்டதுடன் இவை 50 வீத மானிய அடிப்ப டையில் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அம்பன் குடத்தனை ஆகிய பகுதிகளில் 5 பயணாளிகள் தெரிவுசெய்யப்பட்டு ஆட்டுக்கொட்டகை மீள் நிர் மாணத்துக்கென ஒரு பயனாளிக்கு 15ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. இதைவிட பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் 5 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு மாட்டுக் கொட்டகை மீள்நிர்மாணத்திற்கு ஒரு பயனாளிக்கு 30 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி யூலியானா தெரிவித்தார். (116)



யாழ். நகர் 2 ஆம் குறுக்கு வீதி காப்பெட் வீதியாக மாற்றப்பட்டுள்ளது. யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் இவ்வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. (எஸ்)

## அபராதம் ஒரு கோடிக்கு மேல்

கொழும்பில் இருந்து வருகை தந்திருந்த இலங்கை மின்சார சபையின் விசேட குழுவினரது திடீர் பரிசோதனை நடவடிக்கை யின்போது கடந்த 27, 28 ஆம் திகதிகளில் யாழ். நகர்ப்பகுதி யில் மாட்டிக்கொண்ட சட்ட விரோத மின் பாவனையாளர்கள் 76 பேரும் இலங்கை மின்சார சபைக குச் செலுத்த வேண்டிய தொகை ஒரு கோடிக்கும் மேல் என யாழ். நீதவான் நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர்கள் அனைவரின் மீதும் யாழ் நீதவான் நீதிமன்றத்தில் யாழ் பொலிஸாரினால் தாக்கல் செய் யப்பட்டிருந்த வழக்கு விசார ணையின்போதே இவ்விடயம் தெரியவந்திருக்கிறது என அவ்வட் டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வழக்கினை விசாரணை செய்த நீதவான் ஏ.ஏ.ஆனந்த ராசா குறித்த சட்டவிரோத மின் பாவ னையாளர்கள் அனைவரும் இலங்கை மின்சார சபைக்கு செலுத்தவேண்டிய தொகையை உடனடியாக வங்கிகளினூடு செலுத்துமாறு உத்தரவிட்டார். தொடர்ந்தும் மின்சார சபையி னரது நடவடிக்கை தொடர்வதால மேலும் இலங்கை மின்சார சபை க்குச் சேரவேண்டிய மின் கட்ட ணத்தொகை அதிகரிக்கக் கூடும் எனவும் அவ்வட்டாரங்கள் தெரி வித்துள்ளன. (பா)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட காரைநகர் மக்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுகள் வழங்கப்பட்டுள்ளது. ஈ.பி.டி.பி. யின் காரைநகர் பிரதேச அமைப்பாளரும் காரைநகர் பிரதேச சபை யின் எதிர்க்கட்சித் தலைவருமான வீரமுத்து கண்ணன் மேற்கொண்ட முயற்சியால் இப்பிரதேசத்திலுள்ள 80 குடும்பங்களுக்கு இவை வழங்கப்பட்டுள்ளது.

இதில் வெள்ள நிவாரணமாக அரிசி, பருப்பு, சீனி என்பன வழங் கப்பட்டுள்ளது. மேலும் அரசாங்க அதிபர் மற்றும் உதவி அரசாங்க அதிபர் ஊடாக மேற்கூரைத் தகடுகள், தறப்பாள்கள் என்பவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமைப்பாளர் தெரிவித்தார்.

தோப்புக்காடு, மடத்துவழி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 40 குடும் பங்களுக்கும், வலந்தலைச் சந்தி, சம்பு வீதி, ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 40 குடும்பங்களுக்குமே இவ் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. (எஸ்)

பணக் காரன் என்பதற்காகவோ, அழகி என்பதற்காகவோ யாரையும் நேசிப்பதில் ஒரு சிறப்பும் இல்லை. இரண்டுமே மாறக்கூடியவை. இதயம் மட்டுமே அழகாக இருந்தால் போதும் மாறாத இதயம் அன்பினை அதிகப்படுத்தும்

- அலைக்சாண்டர் போப்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## தேசபக்தியும் மரணவிதைகளும்

'கொலையும் ஒரு கலை' என்று மந்திரிகுமாரி படத்தில் கருணாநிதி வசனம் எழுதினார். மாவீரர் நாளையொட்டி புலம்பெயர் தமிழரின் உணர்ச்சியாவேசங்களையும், இணையத்தள வீரவசனங்களையும் காணும்போது கொலைகளிலும் சாவுகளிலும் கிடைக்கும் பெருமித உணர்வு அல்லது இன மொழி சார்ந்த பெருமிதங்களுக்காக கொலையும் சாவும் ஆராதனைக்குரியதாகி விடுவது அச்சமூட்டுவதாகத்தான் உள்ளது. கடந்த காலங்களிலும் மக்கள் கைதட்டி விசிலடித்து ரசித்து அது மக்களபிமானம் பெற்ற கலை என்பதாகவே தோன்றச் செய்திருக்கிறார்கள்.

எதிர்த்தரப்புத் தலைகள் உருளுவதைப் பார்த்து வெறியும் ஆவேசமுமாகத் திருப்திப்பட்டுக் கொள்ளும் மனநிலை குகை மனிதர் காலத்தையதுதான் என்று ஒரேயடியாகச் சொல்ல முடியவில்லை. அறம், நீதி, மனிதப்பண்பு, நாகரிகம் என்று எவ்வளவோ வளர்ச்சி நிலைகளைக் கண்டு தாண்டி வந்த பின்னாலும், இன்றும்கூட மனிதர்களை மனிதர்களே கொல்லுவதற்குச் சொல்லிக்கொள்ளும் நியாயங்களை விட்டுவிட முடியவில்லை.

கொலைப் பழியை கொலை செய்கிறவர்களிடம் மட்டுமே சுமத்திவிட்டு மற்றவர்கள் தப்பிவிடவும் இயலாது. எத்தனை எத்தனையோ அற நீதிகள், அகிம்சா போதனைகளுக்கு மத்தியிலும் நிகழ்ந்து கொண்டிருக்கும் – நிகழ்வதற்கு விருப்பம் கொண்டிருக்கும் கொலைகளின் எண்ணிக்கையை வைத்துப் பார்க்கும் போது எல்லா மனிதர்களுமே கொலைக்கருவிகளைத் தமக்குள் எங்கோ ஒளித்து வைத்துக்கொண்டு நடமாடி வருவதாகத்தான் படுகிறது.

எதிர்க்க வேண்டும் என்று தோன்றினாலும் எதுவுமே செய்ய முடியாத கையாலாகாத்தனமும் குற்றவுணர்ச்சியைத் தரும் சோர்வும் ஒருபுறமிருக்க, தாமே கருதிக்கொள்ளும் நியாயத்துக்காக கொலைகளை எதிர்க்காதிருக்கும் அல்லது வரவேற்கும் மனிதர்களின் குற்றம் இன்னும் பெரிதாகவே இருக்க வேண்டும்.

தங்களிடமிருக்கும் நியாயத்தையும் தர்மத்தையும் கொண்டு மற்றவர்களின் அதர்மத்தை அழித்தல் என்பதைச் சொல்லியே எல்லாப் போர்களும் நடந்தேறுகின்றன. அதாவது, போரில் குதிக்கும் ஒவ்வொரு தரப்புமே தன் பக்கம் நியாயம் இருக்கிறது என்ற நம்பிக்கையுடனேயே குதிக்கிறது. எதிர்த் தரப்பின் பார்வையை மறுதரப்பு உணர்வதில்லை. மற்றவர்களின் வலியை, துக்கத்தை, அழுகையை அறியவோ ஆராயவோ முன்வருவதில்லை. நமக்குள் அதைத் தேடிப் பார்க்க அவகாசம் எடுத்துக் கொள்வதில்லை. நாம் கருதிக்கொள்ளும் நியாயத்திற்கான பொங்குகை மட்டுமே போதுமாயிருக்கிறது.

யோசித்துப் பார்த்தால், தங்களிடமிருக்கும் நியாயமும் தர்மமுமே மற்றவர்களின் அதர்மத்தை அழித்துவிடப் போதும் என்று நம்புபவர்களே மனிதகுலத்திற்குப் பெரிதும் ஆபத்தானவர்கள் என்று தோன்றுகிறது.

"தேசபக்தி முழக்கங்களோடு மரண விதைகளைத் தூவ வந்திறங்கியிருக்கிறார்கள் இன்றைய புதிய மனிதர்கள்" என்றெழுதினார் கமலாதாஸ். உண்மைதானே! தேசத்துக்காக மரணிப்பது பெருமைக்குரியது; மக்கள் அவனைக் கொண்டாடுவார்கள் என்ற ஆசை புகுத்தப்பட்ட ஒருவனுக்கு மரணம் விருப்பத்துக்குரியதாகி விடுகிறது. சாவது விருப்பத்துக்குரியது என்றாகிவிட்டால், கொலைகள் செய்வதும் எளிதாகி விடுகிறது.

நம் தரப்பை ஏற்காதவர்களைக் கொன்று, நாம் வாழ்வது என்கிற ஏற்பாடு அல்லது நமது தர்மத்துக்குப் புறம்பாக உள்ளவர்களை அழித்து நாம் ஜெயித்தல் என்பதுதான் இன்றைக்கும் நம்மிடமுள்ள 'வாழ்தல்' அறமா? மொழி, இனம், தேசியம் போன்ற இன்னோரன்னவை அழிந்துவிடாமல் பாதுகாப்பதற்காகப் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் அழியலாம் என்பது சரிதானா?

மொழிக்காக, குலத்துக்காக, மதத்துக்காக, தேசியத்துக்காக என்று வரலாற்றில் அனேகம் போர்கள் நடந்து முடிந்திருக்கின்றன. மனித இனம் அமைதியாகவும் சுபிட்சமாகவும் வாழும் வழியை அவைகளால் தந்துவிட முடியவில்லை.

போரை வெல்லும் மாவீரம் என்பது அதை உருவாக விடாமல் தடுப்பதிலேயே உள்ளது; அதற்குக் காரணங்களை ஏற்படுத்தாத கரிசனையிலேயே உள்ளது. மரணத்தை வலுவிழக்கச் செய்யும் வாழ்வாதாரங்களையே நாம் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

- ஆசிரியர்

# தலைவர்களை கொலை செய்ய முயற்சி இருவருக்கு எதிராக சட்டமா அதிபர் வழக்கு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரை படுகொலை செய்ய முயற்சித்ததாக இருவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. சட்ட மா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றில் இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சதாசிவம் கனகரட்ணம் என்பவரின் புதல்வரான கனகரட்ணம் ஆதித்யன மற்றும் கந்தவம் நகுல் எனப்படும் ரஹ்வீத் ஆகி யோருக்கு எதிராகவே வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர் மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி ஆகியோரை கொழும்பில் வைத்து படுகொலை செய்வதற்கு குறித்த நபர்கள் முயற்சி செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குறித்த நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. சந்தேக நபர்களுக்கு எதிராக 13 சந்தேக நபர்களை ஆஜர்படுத்த உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

## நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் தீ

(கொழும்பு)

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் நேற்று அதிகாலை பாரிய தீ விபத்துச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்ற இத் தீ விபத்தினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக தீயணைப்புப் படையினர் தீவிர முயற்சியில் ஈடுபட்டனர். கடலிலிருந்து அனல்மின் நிலையத்திற்கு கரித்துண்டுகளை எடுத்துச்செல்லும் குழாயிலேயே மேற்படி தீவிபத்து ஏற்பட்டுள்ளது. இவ்விபத்துச் சம்பவத்தினால் எவருக்கும் இதுவரை எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை எனவும், அனல்மின் நிலையத்தின் சேதவிபரங்களை தற்சமயம் கூறமுடியாதுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் மின் உற்பத்திகள் அனைத்தும் தற்சமயம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. விரைவில் நிலைமை வழமைக்கு திரம்பிவிடும் எனவும் இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

## இந்தியாவில் கடனட்டை மோசடி மன்னாரைச் சேர்ந்த 5 பேர் கைது

பாரிய அளவில் கடனட்டை மோசடியில் ஈடுபட்ட இலங்கையர்கள் ஐவர் இந்தியாவில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து 40.4 இலட்சம் இந்திய ரூபாவும் போலி கடனட்டைகள் பலவும் மீட்கப்பட்டதாக இந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஐவரும் மற்றையவர்களின் கடனட்டை இரகசிய இலக்கம் உள்ளிட்ட தகவல்களை அறிந்து கொண்டு மோசடி செய்துள்ளதாகவும், இந்தியாவில் அவர்களுக்கு மோசடி வலையமைப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரைச் சேர்ந்த அன்டனி ஆனந்தன், பிரதாப், செயிட் அபுதாகிர், வியகுமார் மற்றும் கணபதி ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் கணபதி என்பவரிடமிருந்து 20 போலி கடனட்டைகளும் 40,000 இந்திய ரூபாவும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இஸ்லாமிய விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முஸ்லிம் மக்களினால் நடாத்தப்படும் இஸ்லாமிய விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலையின் ரதி லக்ஷ்மி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கே.எஸ்.எம்.றிஸ்வான் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் இஸ்லாமிய கலை நிகழ்ச்சிகள் மார்க்க சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன.

கலாசாலையின் அதிபர், விரிவுரையாளர்களுக்கும் நினைவுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

(105)

## சரண குணவர்த்தன நாடாளுமன்றம் செல்லத்தடை

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரண குணவர்த்தன ஒரு வாரத்திற்கு நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த வரவு செலவுத் திட்ட சமர்ப்பிப்பு தினமன்று இவர் நாடாளுமன்றில் நடந்து கொண்ட விதம் காரணமாகவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சரண குணவர்த்தன ஒரு வாரத்திற்கு நாடாளுமன்றிற்கு விஜயம் செய்வதை தடுத்து பிரேரணை ஒன்றை சமர்பிக்குமாறு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அவை முதல்வர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்குப் பணித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## துமிந்த நாடு திரும்பியதும் கைது செய்யப்படுவார்

(கொழும்பு)

பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர கொலை வழக்கின் சந்தேகநபராக பெயரிடப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். துமிந்த சில்வா தற்போது சிங்கப்பூரில் சிகிச்சை பெற்று வருவதாகவும், அவர் நாடு திரும்பியதும் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் குற்றப்புலனாய்வினர் நேற்று கொழும்பு மாவட்ட நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

குறித்த வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்ட போது குற்றப்புலனாய்வு திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது. பாரத லக்ஷ்மன் பிரேம சந்திர கொலை வழக்கின் சந்தேக நபராக பெயரிடப்பட்டுள்ள துமிந்த சில்வாவை கைது செய்யுமாறு நீதிமன்றம் விடுத்த உத்தரவு இதுவரை நடமுறைப்படுத்தப்படவில்லை என கொழும்பு மேலதிக நீதவான் தெரிவித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் வைத்திய அறிக்கையின்படி அவர் கைது செய்யப்படும் நிலையில் இருக்கவில்லை என அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற போது எடுக்கப்பட்ட புகைப்படத்தினை காண்பித்து குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

## வளிமண்டலவியல் திணைக்களத்தினர் தொடர்பில் விசாரணை

அண்மையில் நாட்டில் பல பகுதிகளில் பலத்த காற்று வீசிய சந்தர்ப்பத்தில் வளிமண்டலவியல் திணைக்களம் செயற்பட்ட விதம் தொடர்பான அறிக்கையை ஆராய்வதற்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வினை முன்னெடுப்பதற்கு அமைசின் பதில் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிக்கின்றார்.

இந்த விடயத்துடன் தொடர்புடையவர்கள் மற்றும் ஊடகங்களிடம் இருந்து அதிகாரிகள் தகவல்களை பெற்றுக்கொள்ளவுள்ளனர். வளிமண்டலவியல் திணைக்களம் செயற்பட்ட விதம் தொடர்பான அறிக்கைகுறித்தும் குழுவொன்றை நியமிப்பதற்கான தேவை தொடர்பிலும் பின்னர் கலந்துரையாடப்படவுள்ளதாக மஹிந்த அமரவீர குறிப்பிடுகின்றார்.

இதனூடாக கிடைக்கப்பெறும் தகவல்கள் அடங்கிய அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவிக்கின்றார். வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களை ஆராய்வதற்கு இந்திய வளிமண்டலவியல் திணைக்களத்தின் கருத்துக்கள் பெறப்படவுள்ளது. அத்துடன் ஏனைய நாடுகள் மற்றும் இணையத்தளங்கள் அதுதொடர்பில் வெளியிட்ட தகவல்கள் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் குறிப்பிட்டார்.

### - சில கிராம அலுவலர்களின் ஓரவஞ்சகத்தால் -

# உதவிகள் இன்றி அவலப்படும் மீள் குடியேறிய அப்பாவி மக்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சில கிராம அலுவலர்களின் செயற்பாடுகளால் மக்கள் குறிப்பாக அப்பாவிப் பொது மக்களாகிய தாங்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

யுத்தப் பாதிப்புகளுக்கு உள்ளாகி அனைத்தையும் இழந்து மீள்குடியேறியுள்ள மக்களுக்கு சில காலங்களுக்காவது கிராம அலுவலர்கள் நியாயமான முறையில் பொறுப்புடன் செயற்படவேண்டும் ஆனால் கிளிநொச்சியில் பல கிராம அலுவலர்கள் பொறுப்பற்ற முறையில் தங்களுடைய விருப்பு வெறுப்புகளுக்கேற்ப செயற்படுகின்றனர். இவர்கள் செய்கின்ற செயற்பாடுகளுக்காக கூறுகின்ற காரணம் எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாத வகையிலேயே உள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மக்கள் உயரதிகாரிகளிடம் முறைப்பாடு செய்கின்ற சந்தர்ப்பங்களில், அம் மக்கள் எல்லா உதவித்திட்டங்களின் போதும் மேலும், மேலும் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் ஒரு கையெழுத்து பெறுவதற்காக செல்கின்றபோதும் கூட அலைக்கழிக்கப்படுவதும் ஏனையவர்களின் முன்னிலையில் காரணம் எதுவுமின்றி பேசுவதாகவும் பாதிக்கப்பட்டுள்ள மக்களால் கூறப்படுகிறது.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற உதவித்திட்டங்களுக்கான பயனாளிகள் தெரிவுகளின் போதும கிராம அலுவலர்களால் மீண்டும், மீண்டும் தம்முடன் நெருக்கமாக உள்ளவர்களின் பெயர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றது. இவ்வாறானவர்கள் கிராமங்களுக்கு கிடைக்கின்ற எல்லா உதவித்திட்டங் களிலும் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் ஆதாரத்துடன் தெரிவிக்கின்றனர்.

சில குடியேற்றக் கிராமங்களில் அந்த கிராமத்திலேயே பிறந்து வளர்ந்து திருமணம் செய்து நீண்ட காலமாக காணி இன்றி மக்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் அந்தக் கிராமத்து கிராம அலுவலருக்கு குறித்த கிராமங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட காணிகள் உள்ளதனையும் மக்கள் ஆதார பூர்வமாக நீருபிக்கின்றனர். பெரும்பாலும் இவ்வாறு சில கிராம அலுவலர்களால் புறக்கணிக்கப்படுகின்ற மக்கள் வறிய அப்பாவி மக்களாகவே காணப்படுகின்றனர். அவர்களின் வறுமையையும், அறியாமையையும் இந்த கிராம அலுவலர்கள் பயன்படுத்திக்கொளகின்றனர் உதாரணமாக இரத்தினபுரம் வட்டக்கச்சி, மாவடியம்மன், கனகபுரம் ஊற்றுப்புலம் உள்ளிட்ட மேலும் பல்வேறு கிராம அலுவலர்பிரிவுகளில் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்கின்றன.

ஆனால் இம் மாவட்டத்திலேயே சில கிராம அலுவலர்கள் மக்களின் தேவையினை உணர்ந்து இரவு, பகல் கருதாமல் மக்கள் சேவை செய்கின்றவர்களாகவும் உள்ளனர் எனவே மேற்போன்ற கிராம அலுவலர்களின் செயற்பாடுகளால் ஒட்டுமொத்த கிராம அலுவலர்களின் பெயருக்கே களங்கம் ஏற்படுவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

சில கிராம அலுவலர்கள் மிக நீண்ட காலமாக ஒரே கிராமத்தில் கடமையாற்றி வருகின்றனர். குறிப்பாக பதினைந்து வருடங்களுக்கு மேலாக கடமையாற்றும் கிராம அலுவலர்களும் காணப்படுகின்றனர். இவர்களுக்கான உள்ளக இடமாற்றங்கள் எதுவும் ஏன் இதுவரைக்கும் மேற்கொள்ளப்படாமல் உள்ளது. எனவே இது தொடர்பாக பிரதேச செயலர்கள் அரச அதிபர் ஆகியோர் தலையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பது பாதிக்கப்பட்டுள்ள மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. (29)

## வெள்ள நீர் தேங்கி நிற்கும் நெல்லியடி பொதுச்சந்தை

(கரணவாய்)

தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையினால் நெல்லியடி பொதுச்சந்தைப் பகுதியில் வெள்ளம் தேங்கி காணப்படுவதுடன் நுகர்வோரும், வியாபாரிகளும் இதனால் நாளாந்தம் அசௌகரியங்களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர். இச்சந்தையில் முன்னர் மீன் சந்தையாக இயங்கி வந்த இடத்தில் தற்பொழுது மரக்கறிச் சந்தை இயங்கி வருகிறது. இந்நிலையில் இப்பகுதிகளில் வெள்ள நீர் வழிந்தோட முடியாது தேங்கி நிற்பதால் நுகர்வோர் தாம் வெள்ளத்தில் நின்றே மரக்கறிகளை கொள்வனவு செய்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இதனால் இச்சந்தைப்பகுதி சுகாதாரச் சீர்கேடாகக் காணப்படுவதுடன் தொற்று நோய்கள் பரவும் அபாயமும் காணப்படுவதாக வியாபாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வியாபாரிகள் மற்றும் நுகர்வோர்களின் நலன்களில் அக்கறை கொண்டு இச்சந்தைப்பகுதியில் தேங்கி நிற்கும் வெள்ள நீரை அகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட பிரதேச சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது. (18)

## யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் மாற்றுவலுவுள்ளோர்தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச வலுவிழந்தோர் தினத்தை முன்னிட்டு யாழ். “ஜெய்ப்பூர்” வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் நல்லதோர் உலகம் காண ஒன்றிணைவோம். மாற்றுவலுவுள்ளோரின் முன்னேற்றத்திற்காக அவர்களையும் அரவணைப்போம்” எனும் தொனிப்பொருளில் நிகழ்வொன்றை நடத்தவுள்ளது.

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் இல 5 பழைய பூங்கா, வீதியில் அமைந்துள்ள இந்நிறுவனத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வில் ஜெயப்பூர் நிறவனபதில் தலைவர் திருமதி ச. குணரட்ணம் தலைமை தாங்கவுள்ளதுடன் பிரதம விருநதினராக யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் திருமதி தி. குமுதரஞ்சன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் மாற்றுவலுவுள்ளோருக்கு நடமாடும் உபகரணங்கள் வழங்குதல், மாற்று வலுவுள்ளோருக்கு தொழில் வாய்ப்பினை வழங்கிய நிறுவனத்திற்கு கேடயம் வழங்குதல், மாற்று வலுவுள்ள பயனாளிகளான பாடசாலை மாணவர்களுக்கு பரிசில் வழங்குதல் 70 வயதுக்கு மேற்பட்ட பயனாளிகளின் செயற்கை உறுப்புக்களின் பாவனைத்திறன் போட்டி கட்டுரை மற்றும் தையல் போட்டிகளுக்கான பரிசில் வழங்குதல், வெவ்வேறு நிகழ்வுகளில் பங்கு பற்றி தத்தமது திறமைகளைவெளிப்படுத்தி முதலாம் இடங்களைப் பெற்ற ஜெய்ப்பூர் நிறுவனத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களைக் கௌரவித்தல் மற்றும் மாற்று வலுவுள்ளோரின் ஆக்கங்களான கவிதை மற்றும் கட்டுரைகளை வாசித்தல் போன்ற செயறபாடுகள் இடம்பெறவுள்ளது. (உ)

## கால்நடைவைத்திய அலுவலகம் வடமராட்சியில் அமைப்பு

வடமராட்சி கிழக்குப் பகுதியில் என்றிப் திட்டத்தின் கீழ் 1.5 மில்லியன் ரூபா செலவில் கால்நடைவைத்திய அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மக்கள் மீளக்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள இப்பகுதியில் இத்திட்டத்தின் கீழ் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையினரால் இவ் அலுவலகம் கட்டப்பட்டுள்ளது. இவ் அலுவலகம் இப்பிரதேச மக்களின் நலன் கருதி அமைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் தைமாதம் நடுப்பகுதியில் இவ் அலுவலகம் திறக்கப்படவுள்ளதாக கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்தார். (உ-116)

## நெல்லியடி மகாத்மா வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(வடமராட்சி)

கரவெட்டி தெற்கு, மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட நெல்லியடி வடக்கு மகாத்மா வீதி ஊடாக வதிரி இருப்பு மதவடி செல்லும் வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாதுள்ளதாக இப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குண்டும், குழியுமாகக் காணப்படும் இவ்வீதியில் மழைகாலத்தில் வெள்ளம் நின்று அருகில் உள்ள தோட்ட அரண்களையும் உடைத்து பயிர்களைச் தேசமாக்கி அழிக்கின்றது. என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியால் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் என பலர் நாளாந்தம் பெரும் சிரமத்தின் மத்தியில் தாம் பயணத்தை மேற்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

கட்டாக்காலி கால்நடைகளாலும் வீதி அசுத்தமாக்கப்படுவதுடன் இதனால் சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்வீதியைப் புனரமைத்து வெள்ளவாய்க்காலை ஆழமாக்கி, அகலமாக்குவதுடன் சுகாதார சீர்கேடுகள் ஏற்படாத வண்ணம் நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட பிரதேச சபை மற்றும் உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என இப்பிரதேச பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

## பயிற்சியை முடித்த 50 தாதியர்கள் வைத்தியசாலைகளுக்கு நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இருந்து பயிற்சியை முடித்து வெளியேறிய 50 தாதியர்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதாரப் பணிமனை தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு 10 தாதிய பயிற்சி உத்தி யோகத்தர்களும் ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைக்கு 4 பேரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை 12 பேரும், தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு 11 பேரும் மாவட்ட வைத்தியசாலைகளான வேலணை வைத்தியசாலைக்கு 01 நபரும் சங்கானை வைத்தியசாலைக்கு 05 பேரும் அச்சு வேலி வைத்தியசாலைக்கு 03 பேரும், கோப்பாய் வைத்தியசாலைக்கு 02 பேரும் காரைநகர் வைத்தியசாலைக்கு 02 பேரும் நியமனம் பெற்றுள்ளனர்.

நியமனம் பெற்ற தாதியர்கள் கடந்த 14,15 ஆம் திகதிகளில் தாம் நியமனம் பெற்ற வைத்தியசாலையில் கடமைப்பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளதாக பணிமனையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எஸ்)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுச் சேவையில் உள்ளவர்களுக்கான ஆங்கில திறன் விருத்தி நிலையத்திற்கான விடுதி திறப்பு விழாவில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் வே. தி. செல்வரத்தினம் ஆகியோர் இணைந்து விடுதியை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் ஆளுநர் கலாசாலை மாணவர்களுடன் கலந்துரையாடுவதையும் காணலாம்.

# 23 மருத்துவர் வெற்றிடத்திற்கு விண்ணப்பித்தவர்களோ 15 பேர்

(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கென 23 வைத்தியர் வெற்றிடங்களுக்கு நியமனம் வழங்குவதற்கு விண்ணப்பம் கோரி விளம்பரப்படுத்தப்பட்டிருந்தபோதும் அதற்கு 15 வைத்தியர்கள் மட்டுமே விண்ணப்பித்திருந்ததாக சுகாதார அமைச்சை மேற்கோள் காட்டி யாழ்பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பம் கோரியிருந்த மிகுதியான எட்டு வைத்தியர் வெற்றிடங்களுக்கு எந்த வைத்தியரும் விண்ணப்பித்திருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில் இவ்வாறு 800 வைத்தியர் வெற்றிடங்களுக்குச் சுகாதார அமைச்சினால விண்ணப்பங்கள் கோரி விளம்பரபபடுத்தப்பட்டிருந்த போதும் 735 வைத்தியர்களே விண்ணப்பித்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்டத்தில் அரச வைத்தியசாலைகளில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் முகமாக தாம் 50 வைத்தியர்களைச் சுகாதார அமைச்சின் ஊடாக சுகாதார அமைச்சைக் கோரியிருந்ததாகவும் அதன அடிப்படையிலேயே 23 வைத்தியர வெற்றிடங்களை நிரப்புவதற்குச் சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்ததாகவும் அதற்கு 15 வைத்தியர்கள் மட்டுமே விண்ணப்பித் திருந்ததாகவும் தெரிவித்த அவர் அண்மையில் அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டிருந்த தாகவும் குறிப்பிட்டார்.

இருந்தும் தொடர்ந்தும் யாழ். மாவட்டத்திற்கு வைத்தியர்கள் பற்றாக்குறையாகவே இருந்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (பா)

# பூம்புகார் கிராம மக்களுக்கு சமைத்த உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கடந்த சில நாட்களாகப் பெய்த பெருமழை காரணமாக அரியாலை கிழக்கு பூம்புகார் (ஜே/90) கிராம அலுவலர் பிரிவில் உள்ள 28 குடும்பங்கள் தத தம் குடியிருப்புகளில் இருந்து வெளியேறிய நிலையில் பூம்புகார் அ.த.க பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளதுடன் இவர்களுக்கான சமைத்த உணவு வழங்கப பட்டு வருகிறது.

ஈ.பி.டி.பி கட்சிகளின் நல்லூர் பிரதேச அமைப்பாளரும், நல்லூர் பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவருமான அ.ரவீந்திரதாசன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சென்று பார்வையிட்டு நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன், அனர்த்த முகாமைப் பணிப்பாளர் ரவி, கிராம சேவையாளர் ஆகியோருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்களின் அனுசரணையுடன் வேண்டிய உதவிகளை செய்துள்ளார்.

இதேவேளை நல்லூர் பிரதேச சபை செயலாளர் மேரி சாந்தசீலனின் உதவியுடன் இம் மக்களுக்கான குடிநீர் விநியோகமும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இலவச வைத்திய பரிசோதனைகளும் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் அ.ரவீந்திரதாசன் தெரிவித்தார்.

# வலி.கிழக்கு பிரதேச வீதிகளுக்கு மின்விளக்கு பொருத்தும் செயற்பாடு

(கோப்பாய்)

வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்தும் வேலைகள் தற்போது முன்னெடுக்கப் பட்டு வருவதாக வலி. கிழக்குப் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும், கோப்பாய் பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னர் வீதிகளுக்குப் பொருத்தப் படுவதற்கென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினாலும், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியினாலும் வழங்கப்பட்ட 150 மின் விளக்குகளே தற்போது பொருத்தப் பட்டு வருகிறது.

மேற்படி 150 மின்விளக்குகளில் உரும்பிராய், கோப்பாய், அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி ஆகிய பகுதிகளில் உள்ள வீதிகளுக்கு தலா 30 மின்விளக்குகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது உரும்பிராய் உப அலுவலகத்திற்குட்பட்ட வீதிகளுக்கு மின் விளக்கு பொருத்தப்பட்டு வருவதாகவும் இவவிளக்குகள் பொருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இ.ஐங்கரன் தெரிவித்தார். (135)

# பண்ணை - ஊர்காவற்துறை வீதி மழையினால் முற்றாகச் சேதம்

(யாழ்ப்பாணம்)

தொடர்ந்து பெய்துவரும் கனமழை காரணமாக தீவகம் பண்ணை, ஊர்காவற்துறை வீத், மண்டைதீவு வீதிகள் என்பன மோசமாக சேதமடைந்துள்ளது.

இதன் காரணமாக இவ்வீதிகளினூடு பயணிக்கும் பயணிகள் மற்றும் பயணிகள் வாகனங்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கிப் பயணித்து வருவதனை அவதானிக்க முடிகிறது.

மழைநீர் வீதியின் ஆங்காங்கேயுள்ள பள்ளமான பகுதிகளில் தோங்கி நிற்பதால், அப்பகுதி அரிக்கப்பட்டு பாரிய குழிகளாக மாறி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தி வருகின்றது.

பண்ணை ஊர்காவற்துறை வீதியின் திருத்தப்பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அப்பணிகளும் தற்சமயம் மழை காரணமாக நிறுத்தப்பட்டிருக்கின்றது.

இதேவேளை மண்டைதீவுச் சந்தியிலிருந்து மண்டைதீவுக்குச் செல்லும் பிரதான வீதியும் இவ்வாறு குண் டும் குழியுமாகச் சேதமடைந்து காணப்படுவதுடன், இரண்டு இடங்களில் வீதிப்பகுதியில் பாரிய பள்ளங்களும் ஏற்பட்டிருக்கின்றது.

இதன் காரணமாகவும் அப்பகுதி மக்களின் போக்குவரத்துக்களும் மிகுந்த சிரமங்களினூடே மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும் இரண்டு தடவைகள் இவ்வீதி திருத்துவது குறித்து மதிப்பீட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரியவருகின்றது. (பா,எஸ்)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(30.11.2011-புதன்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
கார்த்திகை 14 ஆம் நாள்.
இராகுகாலம் 12.14-1.44, சுபநேரம் 4.44 -6.14 வரை
நட்சத்திரம்: திருவோணம் பி.இ . 12.59 வரை
திதி: ஷஷ்டி முழுவதும் ஷஷ்டி விரதம்
இராமநாதர் குருபூசை.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:-** காசு வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, சங்கடமான நிலை, எதிர்பாராத துயரம், முகங் கோணுதல்.

**ரிஷபம:-** காரியத்தடை காசுக்கஷ்டம், இனசன உதவி, உடல்நலக் குறைவு, வீண் பயம்.

**மிதுனம் :-** பணம் வரும், அவசர முடிவு, தெரு விபத்து வரலாம், குடும்பத்தில் குழப்ப நிலை, தொழில் மந்தம்.

**கடகம்:-** சகோதரர் பகை, பணக் கஷ்டம், தேகம் பலவீனம், சங்கடமான நிலைமை, அதிகாரப் போட்டி.

**சிம்மம்:-** காசு வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, தானதர்ம சிந்தனை, சுபகாரியச் செலவு, தேகம் பலவீனம்.

**கன்னி :-** காசுக் கஷ்டம், எதிர்பாராத உறவு, குடும்பத்தில் குழப்ப நிலை, இனசன உதவி, தவறான முடிவு.

**துலாம் :-** குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், மனதில் மகிழ்ச்சி, அவசர முடிவு, தேக சுகம்.

**விருச்சிகம்:-** பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், வீணான பயம், வேலைப்பளு, உடம்பு பலவீனம்.

**தனுசு:-** குடும்பத்தில் துயரம், பணக் கஷ்டம், இனசன உதவி, வேண்டாத செயல், தேகம் சுகம்.

**மகரம:-** பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, முகங்கோணுதல், உடம்பு பலவீனம், தெரு விபத்து.

**கும்பம் :-** சுபகாரியப் பேச்சு, பணக் கஷ்டம், எதிர்பாராத கஷ்டம், கடன் வாங்குதல், தேகம் பலவீனம்.

**மீனம் :-** பணம் வரும், சுபகாரியச் செலவு, குடும்பத்தில் கவலை, இனசன கொண்டாட்டம், தேக சுகம்.

# விற்பனை நிலையம் திறப்பு

பூநகரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் பூநகரி சங்குப்பிட்டி பிரதான வீதியில் பனம் பொருள் விற்பனை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த விற்பனை நிலையத்தில் பனை அபிவிருத்திச் சபையால் கௌதாரிமுனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பனம் பொருள் உற்பத்தி பயிற்சி நிலையத்தில் தயாரிக்கும் கைப்பணி பொருட்களும் பனம் பண்டங்களும் விற்பனை செய்யப்படுவதாக பூநகரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்தார். (112)

# யாழ். குடாநாட்டில் தேங்காய் விலை வீழ்ச்சி


(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடந்த சில நாட்களாக தேங்காயின் விலை வெகுவாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

யாழ். மாவட்டத்தின் முக்கிய சந்தைகளாகக் கருதப்படும் கொடிகாமம், சாவகச்சேரி, நெல்லியடி, பருத்தித்துறை, சுன்னாகம், மருதனார்மடம், சங்கானை, பண்டத்தரிப்பு, திருநெல்வேலி ஆகிய சந்தைகளிலேயே தேங்காய்களின் விலை வெகுவாக வீழ்ச்சி கண்டுள்ளது.

திருநெல்வேலிச் சந்தையில் 15 ரூபா முதல் 25 ரூபாவரையும், மருதனார்மடம் சந்தையில் 20 ரூபா முதல் 30 ரூபாவரையும், கொடிகாமம் சந்தையில் 15 ரூபா முதல் 25 ரூபா வரையும், நெல்லியடி, பருத்தித்துறை சந்தைகளில் 30 ரூபாவாகவும், சாவகச்சேரி சந்தையில் 30 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதேவேளை தேங்காயின் விலை அதிகரித்திருந்த காலப்பகுதியில் நுகர்வேரின் பெரும்பாலானோர் தேங்காய்ப் பால்மா பைக்கற்றுக்களைப் அதிகம் பாவித்து வந்தனர். தேங்காயின் வலை பெருமளவில் வீழ்ச்சியடைந்ததை அடுதது தேங்காய் கொள்வனவில் நாட்டம் செலுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.




மழை கொஞ்சம் வெறிச்சு விட்டிருக்கு எண்டாலும் மற்ற மற்ற மாகாணங்களைப் போல நான்கு ஐந்து நாட்களாக இரவும், பகலும் அடைத்து வைத்துப் பெய்யேல்ல.

அதால பெரிசா வெள்ளப் பெருக்குகளும் இன்னும் ஏற்படேல்ல. எண்டாப்போல இனிமேலும் நடக்காதெண்டு சொல்ல மாட்டன். ஏனெண்டா இன்னம் மாரிகாலம் முடியேல்லைப் பாருங்கோ!

இந்நிலை மேலயே எங்கட வீதிகள் கிடக்கிற கிடையை உங்களுக்குத் தெரியுந்தான. போன கிழமை போட்டு நிரப்பிய தாரும், கல்லும் மறுபடியும் கிளறுப்பட்டு கிடக்கு.

குழியளில வெள்ள நீர் தேங்கி நிக்குது. கிளறுப்பட்ட கல்லுகள் வீதியெங்கும் நெல்லுக்காயப் போட்டதுபோல பரவுப்பட்டுக் கிடக்குது.

அதுகளில பெரிய பெரிய டிப்பர் மற்றும் சொகுசு பஸ்சுகள் ஏறி ஓடினாத் தாங்கும். எங்கட ரெண்டு சில்லு வாகனங்கள் தாங்குமே!

ரயரும், ரியூப்பும் ரெண்டு மாதத்திற்கு ஒருக்காப் புதிசாப் போடவேணும், அதுமட்டுமே கிழமேல குறைஞ்சது மூண்டு ஒட்டெண்டான்ன வரும்.

இப்ப ஒரு ஒட்டொட்ட முப்பது ரூபா. ரயர், ரியூப் மாத்திறேண்டா சுளையா ஆயிரம் ரூபா வேணும். எப்புடி இருக்கும் எங்கட வாழ்க்கைத் தரம்.

போனவாரம் எங்கட ஆசிரியர் ஒருவர் கண்டு கதைச்சார். என்னண்டா எங்கட பகுதிகளில இருக்கிற பிரதேச சபையள் என்ன செய்யுது?

அந்தப் பிரதேச சபைகளுக்கு சமீபத்தில தேர்தல் நடந்து முடிஞ்ச. அதில மக்களால தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தினர் ஒரு மூச்சையும் விடுறதாக் காணேல்ல எண்டு!

அவையள் ஒவ்வொரு பிரதேச சபைகளுக்கு உள்ளும் இருக்கும் வீதிகளையும், வடிகால்களையும் மற்ற மற்ற மாநகர சபை, செயலகங்களுடன் பங்கெடுத்து சீராக்கக்கூடாதே!

அவையள் மக்கள் பிரச்சினைகளைக் கதைக்கிறேல்ல. அரசியல் பிரச்சினைகளை மட்டுந்தான் கதைக்கினம் எண்டார். அதுக்குப் பிறகுதான் எனக்கும் அவேன்ர ஞாபகமே வந்தது.

ஏனெண்டா நாங்க எடுத்த வீச்சு யாழ். மாநகர சபை வீதி அபிவிருத்தி அதிகார சபை எண்டு சுத்திச் சுத்தி ஒரு வட்டத்துக்கையே சிந்தித்துக் கொண்டிருக்கிறம்.

வட பகுதியளில இருக்கிறபிரதேச சபையள் என்ன செய்யுதுகள் எண்டு இதுவரை சிந்தித்துப் பாத்திருக்கிறமே!

அவையள்தான் நாங்க தெரிவு செய்யிற ஆக்கள், அரசியல் இல்லாமல் வாழ்க்கையே இல்லைத்தான். முழுக்க முழுக்க அரசியலையே சிந்தனையில் வைக்காமல் மக்களையும், மக்களின் வாழ்வியலையும் இவர்கள் சிந்திக்க வேணும்.


ஆக வீதிப் போக்குவரத்து மட்டுமல்ல, குடியிருப்பு வசதிகள், குடிநீர் பிரச்சினைகள் சுற்றுச் சூழல், சுகாதாரம், கழிவறைகள் போன்ற இன்னோரன்ன தேவைகள் மக்களுக்கு இருக்கல்லே?

கூட்டுறவாளர் வீரசிங்கம் ஐயாவின் சிலையை அங்கேயும், இங்கேயுமாக இழுத்தடிக்கிறதை விட்டு அவரது மக்கள் பணியைச் செய்ய பிரதேச சபைகள் இனிமேலாவது முன்னுக்கு வரவேணும் பாருங்கோ!



# இராசி பலன் 2012

## சிம்ம ராசி



மகம், பூரம் 1ஆம் பாதம் வரை உத்திரம்
பெயர் முதலெழுத்துக்கள்
ம, மி, மு, மே, மோ, ட, டி, டு, டே.

நீங்கள் முரட்டுத்தனமான தேக அமைப்பும், கம்பீர நடையையும், சராசரியான உயரமும், வசீகரமான செயலும் பேச்சும் உடையவர்கள். சிரித்த முகமும், அனைவரையும் கவரக்கூடிய காந்த சக்தியை உடைய கண்களையும் உடையவர்கள், அஞ்சாத நெஞ்சுறுதியும், கம்பீரமாகப் பேசும் வல்லமையும், பிறரை வணங்காத குணமும் கொண்டவர்கள். பிறரை மன்னிக்கும் சுபாவம் உடையவர்கள். எதையும் சாதிக்கும் ஆற்றல் உடையவர்கள். பிறரது கருத்தையோ ஆலோசனைகளையோ கேட்காமல் உங்கள் விருப்பப்படியே தான் செயற்படுவீர்கள். ஆசாரம், அனுஷ்டானம், தெய்வ பக்தி நெறியான வாழ்க்கையில் பற்று உடையவர்கள். எதிரிகளின் வேகம் உங்களிடம் எடுபடாது. பலவிதமான சோதனைகள், தடைகளை எதிர்த்து வீறுநடை போடுவார்கள். பிறரை அடக்கியாளும் அதிகாரம் செலுத்தும் வல்லமையை உடையவர். வைராக்கியமும், மனோபலமும் மிக்கவர்கள். கொடுத்த வாக்கை காப்பாற்ற சில சமயங்களில் தவறுபவர்கள். இளமையில் வறுமையை அனுபவிப்பவர்கள். அனைவரிடமும் பாகுபாடு பாராமல் பழகுவீர்கள்.

இப்படிப்பட்ட உங்களுக்கு 2012 புத்தாண்டின் பலன்களைப் பற்றி பார்ப்போம். 9 இல் குரு, 3 இல் சனி, கேந்திர ராகு கேதுக்களின் சஞ்சாரத்தால் பணவசதிகள் திருப்திகரமாக கை கொடுக்கும். நண்பர்கள் மிக்க உதவிகரமாக நடந்துகொள்வார்கள். உறவினர்கள் வருகையும், சுபகாரிய நிகழ்ச்சிகளும் திகதி நாள் குறிப்புக்களும் உண்டாகும். புதிய வாகனங்கள் வாங்கி உபயோகிப்பீர்கள். அடிக்கடி நல்ல பணவரவுகள் பல சாதனைகளைச் செய்ய வைக்கும். குடும்ப வாழ்க்கையில் நல்ல பல முன்னேற்றங்களும், சந்தோஷங்களும் கிடைக்கப் பெறுவீர்கள். குடும்பத்தில் ஒருவருக்கொருவர் உதவிகரமாகச் செயற்படுவீர்கள். புதிய பொன் பொருள்கள் சேரும். ஆடம்பர வாழ்க்கை தொடங்குவதாக இருக்கும். அண்டை அயலாருடன் நட்பு இணக்கம் அதிகரிக்கும். வெளியூர் பிரயாணங்கள் மனதிற்கும், உடலுக்கும் திருப்தியை அளிக்கும். உல்லாசப் பிரயாணங்கள் குடும்பத்துடன் அமைய வாய்ப்புண்டு. கணவன், மனைவி உறவு நல்லிணக்கத்தை அளிக்கும். புத்திரிகளால் சகல நிவர்த்தி உண்டு. இருப்பிடத்தில் சௌகர்யங்கள் ஏற்பட்டு நன்மதிப்பு ஏற்படும்.

2412012 முதல் 1442012 வரை ஜென்ம ராசியில் செவ்வாய் வக்கிரமடைவதால் பிடிவாதம் அவசரம் போன்ற குணங்களால் முயற்சிகளில் இழுபறி ஏற்படும். சொத்துக்கள் பற்றிய அதிருப்தி இருக்கும். உடல் நலத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

1552012 முதல் 2762012 வரை சுக்கிரன் வக்கிரமடைவதால் தன் சுக சௌகர்யங்களை தாமே குறைத்துக் கொள்ளும் நலி இருக்கும். உடல் நிலை, வேலைப்பளு இரண்டும் மனச்சோர்வை ஏற்படுத்தக்கூடும்.

16.05.2012 முதல் 4.8.2012 வரை சனி பகவான் தமது வக்கிர சஞ்சார கதியில் மறுபடி கன்னி ராசியில் சென்று மீள்வார் இக்காலம் மறுபடி 7 1/2 சனியாக இருக்காது. பெரிய தன லாபம் ஏற்படும். பேச்சுவார்த்தைகளில் சாதனை புரிவீர்கள்.

தொழில் வகையில் விரும்பிய இடமாற்றங்களும், பதவி உயர்வுகள் சுய தொழில் வகையினர்களுக்கு வருவாய் உயர்வுகள் யாவும் சிறப்பான அமையப் பெற்று மற்றவர்கள் மத்தியிலும் சமுதாயத்திலும் உயர்ந்த அந்தஸ்தை அடைவீர்கள். திடீர்திடீர் தன வரவுகள் கிடைக்கப்பெற்று பல காரிய சாதனைகளைச் செய்து மகிழ்ச்சியடைவீர்கள். சுய தொழில் செய்பவர்கள் போட்டிகள் விலகிவிடும். எவ்வித முட்டுக்கட்டைகளும் இன்றி நிறைவான தொழில் வளம் பெறுவீர்கள். தொலைவிடங்களிலும் வெளிநாடுகளிலும் வரவேற்பு ஏற்படும். மொத்தத்தில் இது ஒரு நல்ல ஆண்டாக செயற்படும்.

### பெண்களுக்கு

உங்களுக்கு இது ஒரு பொன்னான காலமாகும். குடும்பத்தில் பொன் பொருள் சேர்க்கைகள், ஆடை அணிமணிகள் சேர்க்கைகள் ஆடம்பரப்பொருள் சேர்க்கைகளும் அமோகமாகச் சேர்ந்து உங்களை உற்சாகப்படுத்தும் கணவன், மனைவி உறவு நிலை நல்ல இணக்கமும், இன்பமும் நிறைந்ததாக இருக்கும். குழந்தைகளால் நல்ல யோகமான பாக்கியங்கள் கிடைக்கப் பெறுவீர்கள். பெற்றோரால் நல்ல அன்பும், ஆலோசனைகளும் கிடைக்கப்பெறுவீர்கள். சகோதர வகையினர் உதவிகரமாக செயற்படுவார்கள். அக்கம் பக்கத்தில் சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தை அடையப் பெறுவீர்கள். 1752012 வரை குரு பலம் இருப்பதால் முக்கிய நிகழ்ச்சிகள் சுப காரியங்களுக்கு உதவுவதே!

### உத்தியோகஸ்தர்களுக்கு

தொழில் நல்ல விதத்தில் அமைந்து வேலைப்பாடு குறையும். பல சௌகரியங்கள் சேர்ந்து வரும். இடமாற்றம் அரசாங்க முயற்சி இவைகளில் தக்க நன்மை ஏற்படும். சக பணியாளர்கள் கீழ்ப்படிந்த ஊழியர்களால் நன்மை ஏற்படும். 17.05.2012 இற்கு மேல் சாதாரண சூழ்நிலை உண்டு. அடிக்கடி ஓய்வு, விருப்பு கலந்திருக்கும்.

### வியாபாரிகளுக்கு

வியாபாரம் விருத்தி அடைந்து கணிசமான இலாபத்தை கொடுக்கும். நீண்ட நாள் தடை தாமதப்பட்டு வந்த காரியங்கள் யாவையும் இப்போது நிறைவேற்றிக் கொள்ளலாம். கொடுக்கல் வாங்கல் இனங்கள் இழுபறி நிலையைக் கொடுக்கும். எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்து வெற்றி காண்பீர்கள்.

### தொழிலாளர்களுக்கு

யூனியன் விவகாரங்கள் யாவும் வெற்றி அடைந்து உங்களுக்கு சாதகமான பல நற்பலன்களைக் கொடுக்கும். சக தொழிலாளர்களின் அன்பும், ஆதரவும், சந்தோஷத்தைக் கொடுப்பதாக இருக்கும். நீண்டகால ஆசைகள் இழுபறியாகும். குடும்பத்தில் செய்யவேண்டிய சுபகாரியங்கள் யாவற்றையும் இப்போது செய்து முடிக்கலாம்.

### விவசாயிகளுக்கு

அமோகமான விளைச்சலை விளைவிக்கும். சாதனைகளைச் செய்யக்கூடிய காலகட்டமே இது. எங்கும் கேட்டது கிடைக்கும். நீங்கள் போட்டது ஒன்றுக்கு பத்தாக முளைக்கும். வாழ்க்கைத் தரம் உயர்ந்து உங்களை பரவசப்படுத்தும். எதைச் சாதிக்க வேண்டுமோ அதைச் சாதிக்கலாம்.

### மாணவர்களுக்கு

உங்களுடைய கடின முயற்சியினால் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் எடுக்க முடியும். கேளிக்கை ஈடுபாடுகளில் அதிகம் கவனம் செலுத்த வேண்டாம். சுற்றுலா பிரயாணங்கள் சென்று வருவீர்கள்.




பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்
(கொக்குவில் இந்துக் கல்லூரி தொடர்பாடல் ஊடகக்கற்கை ஆசிரியர்)

நாளை அனுஷ்டிக்கப்படவுள்ள உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது...

# மாறிவரும் சமூக சூழலும் எயிட்ஸ் - எச்.ஐ.வியும்

மாறிவருகின்ற சமூகச் சூழல் என்ற எண்ணக்கரு உலக மயமாக்கல், நவீன மயமாக்கல், போட்டி சமூக அபிவிருத்தி, சிந்தனையின் பின்னணியில் இருந்து உருவாக்கம் பெறுவதாக அமைகின்றது. மாற்றம் என்ற பதம் அபிவிருத்தியைக் சுட்டுகின்றது. இந்த மாற்றம் அதாவது அபிவிருத்தி நன்மைக்கானதாக அமைதல் முக்கியமாகின்றது.

இன்று அபிவிருத்தி என்ற நிலைமையில் மேற்கொள்ளப்படும் தொலைநோக்கற்ற செயற்பாடுகள் சமூகச் சூழலின் நீண்டகால இயங்காற்றலை கூறுபோடுவதாக அமைவதையும், சமூக ஒழுங்கிலும், சமூகக் கட்டமைப்பிலும், தனிமனித சமூக விருத்தியிலும் எதிர்மறைத் தாக்கங்களை விளைவிக்கின்றதை உணர முடிகின்றன. சமூக நலத்துறை சார்ந்த தாக்கமாகவும் மாறி வரும் சமூகச் சூழலில் வேகமாக பரவிவரும் நோயாகவும் எயிட்ஸ் இனங்காண முடிகின்றது.




மாற்றம் அல்லது அபிவிருத்தி என்பது நீண்டகால சமூக நிலவுகைக்கு நன்மையளிப்பதாக அமைதல் வேண்டும். ஆனால் மாறிவரும் சமூகச் சூழல் நிலவரம் தரமான அபிவிருத்தி, தரமான வாழ்க்கை பண்புச் சுட்டி நிலை, நிலைத்து நிற்கக்கூடிய அதாவது பேண்தகு அபிவிருத்திப் போக்குகளை கேள்விக்குறியாக்கும் வகையிலும், ஆரோக்கியமான சமூக உருவாக்கம், உறுதியான எதிர்கால சந்ததி விருத்தியாக்கத்தில் சவால்களையும், பல வீனங்களையும் உருவாக்கும் பிரதான காரணியாக இந்நோயின் தாக்கம் வலுப்பெற்று வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. இத்தகைய மாறிவரும் போக்குகள் யாழ். மாவட்ட சமூகச் சூழலில் பிரதிபலிப்பதையும், அதன்மூலம் எமது பிரதேசத்தில் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைமைகள் உருவாகியுள்ளன.

**யாழ். மாவட்டம், மாறிவரும் சமூக சூழலின் இயல்பும், பரவலுக்கான காரணிகளும்.**

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் சமூகச் சூழல் என்பது பிரதேச அடிப்படையிலும், பௌதீக சமூக கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களிலும் தனித்துவமான இயல்புகளைக் கொண்டமைந்தது.

சமூகச் சூழல் பிரதானமாக போரியல் தாக்கப் பின்னணியில் தாக்கங்களுக்கு உட்பட்டும், நிலையற்ற சூழல் தன்மைகளைக் கொண்டும், மாற்றங்களுக்கும் உட்பட்டும் இருந்து வந்துள்ளதை உணரமுடிகின்றது. இலங்கையில் முதன் முதலில் எயிட்ஸ் தொற்று இனங்காணப்பட்ட (1986) காலப்பகுதி முதல் இன்றுவரை யாழ். மாவட்ட சமூகச் சூழல் போர்த்தாக்க விளைவுகளுக்குள் உள்ளடங்கிய காலப்பகுதியாக இருந்து வந்துள்ளதை ஒப்பீட்டு நோக்க முடிகின்றது.

சமூகச் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு பல்வேறு காரணிகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் செல்வாக்குச் செலுத்துகின்றன. எமது மாவட்டத்தின் பௌதீக அமைவிடம், அதாவது புவியியல் ரீதியில் குடாநாடாக அமைந்து ஒரே ஒரு தரைவழிப் பாதை மூலம் ஏனைய நிலப்பிரதேசத் தொடர்பை கொண்டு இருப்பதுவும், சார்பமை விட ரீதியில் தென் இந்தியப் பிரதேசத்தை அண்மித்த வகையில் அமைவிடத்தைக் கொண்டிருப்பதுவும், பிராந்திய ரீதியில் வல்லரசுகள் செல்வாக்குச் செலுத்த முனையும் நாடாகவும் தென்னிந்திய - குடாநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் புராதன காலம்முதல் இருந்து வந்துள்ளமை, மீன்பிடித் தொழில் ரீதியான தொடர்புகளுக்கும், அரசியல் ரீதியான காரணிகளினால் மூன்று தசாப்தத்திற்கு மேற்பட்ட இனமுரண்பாடுகள் தரைவழி, கடல் வழி, தொடர்பு நிலைகளில் மட்டுப்பாடுகளையும், தடைகளையும் ஏற்படுத்தியிருந்தன.

இடப்பெயர்வு, குடிபெயர்வு அதிகரிக்கக் காரணமாகின. அகதிவாழ்வு, புலம் பெயர்வு எனப் புதிய வாழ்வியல் மாற்றங்களை உருவாக்கின. இவற்றினால் சமூகத் தொடர்பு நிலைகளில் மாற்றங்கள் வலுப் பெறலாயின.

மிக அண்மையில் எமது சமூகச் சூழலில் நீண்டகாலமாக இருந்து வந்த யுத்தச் சூழலில் ஓர் அமைதியான நிலைமை உருவாக்கப்பட்டு, அரசியல், பொருளாதார சமூக ரீதியில் பல்வேறு மாற்றங்கள் அபிவிருத்தி நோக்கிய வகையிலும், மீள் கட்டுமான நிலைகளிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குடாநாட்டில் சமூக சூழல் தன்னகத்தே புதிய சூழமைவுகளை உருவாக்கியுள்ளன. அந்த வகையில் மாறிவரும் சூழலின் இயல்புகளாக பின்வருவன எச்.ஐ.வி எயிட்ஸ் நோய் பரவலுடன் நேரடி, மறை முகத் தொடர்புகளை உருவாக்குவனவாக அமைகின்றன.

- **தரைவழிப்பாதை திறக்கப்பட்டு ஏனைய பிரதேசங்களுடன் தொடர்புகள் விரிவாக்கமடைந்து வருகின்றமை.**
- **தடுப்பு முகாம், அகதி முகாம், வாழ்க்கை நிலைமைகள்.**
- **பல்தேசிய கம்பனிகள், முகவர்களின் வருகை.**
- **உல்லாச விடுதிகளின் அதிகரிப்புக்கள்.**
- **இடம்பெயர்ந்தவர்கள், குடிபெயர்ந்தவர்கள் மீள் வருகை தரல்.**
- **தென்பகுதி உல்லாசப் பிரயாணிகளின் மிகை அதிகரிப்புக்கள்.**
- **தெருவோர அங்காடிகளின் அதிகரிப்பு.**
- **நடமாடும் தென்னிலங்கை தென்னிந்திய வியாபாரிகளின் விரிவாக்கங்கள்.**
- **திட்டமிடப் படாத அல்லது பலவீனமான குடியேற்றத் திட்டங்கள் இடம்பெறுதல்.**
- **தொழில் வாய்ப்பைத் தேடி இளைஞர், யுவதிகள் வேறு பிரதேசங்களுக்கு அதிகளவில் ஈடுபடுத்தப் படுதல்.**
- **போதைவஸ்துப் பயன்பாடுகள் அதிகரித்துள்ளமை.**
- **விபசார தொழில் நடவடிக்கைகளின் விரிவாக்கங்கள்.**
- **வெகுசன தொடர்பு ஊடகங்களின் அதீத பயன்பாடுகளும் செயற்பாடுகளும்.**
- **புலம்பெயர்வு, இடப்பெயர்வு, குடாநாட்டு திருமண உறவு அதிகரிப்புக்கள்.**
- **துரித அபிவிருத்தி முனைப்புக்கள்.**
- **போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட விதவைகள், அநாதைகளின் அதிகரித்த போக்குகள் சமூகமட்டத்தில் உள்ளமை.**

இவ்வாறான சமூகச் சூழலின் மாற்றங்கள் எயிட்ஸ் - எச்.ஐ.வி பரவலுடன் தொடர்புபட்டமைகின்றது. இந்நோயின் தாக்கவேகத்தையும், பரவலாக்கத்தையும் தூண்டும் காரணியாகவும், நோயினை எதிர்கொள்வதற்கான சவால்களை உருவாக்கும் காரணிகளாகவும் இனங்காணக்கூடியதாக உள்ளது.

இந்நோயின் விரிவாக்க எல்லைகளை வரையறை செய்வது, அவற்றைக் குறிப்பிட்ட வரையறைக்குள் மட்டுப்படுத்திய வகையில் இனங்காண்பது என்பதுவும், பரவலை தீர்மானிப்பது, கட்டுப்படுத்துவது என்பனவும் கடினமானது. எனினும், இந்நோய் பரவல் பல்வேறுபட்ட காரணிகளின் பின்னணியினால் வேறுபட்ட நிலையை அடைகின்றன.

நோய்ப் பரவலாக்கத்தில் மிகை சனத்தொகை அதிகரிப்பு, பாலியல் தொழிலாளர் அதிகரிப்பு, உலக மயமாக்கல் நவீனத்துவம், தாராள மய மாக்கல், திறந்த பொருளாதாரப் பின்னணிகள், வெளிநாட்டு சுற்றுலாத்துறை விரிவாக்கங்கள், இளவயது தொழிலாளர் அதிகரிப்பு, உள்ளூர் - வெளியூர் குடிபெயர்வுகள், மட்டுப்பாடான சுகாதார ஒழுங்குகள், பலவீனமான தொடர்பு ஊடக அறிவுப் போட்டி சமூக விரிவாக்கங்கள் போன்றன எயிட்ஸ் - எச்.ஐ.வி தொற்றுக்கான பொதுக் காரணிகளாக சுட்டிக்காட்டப்படுகின்றன.

# உயர் நீதிமன்றம் வரை சென்றது இலங்கை கிரிக்கெட் சபை விவகாரம்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் சபை நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான தேர்தலுக்கு திகதி குறிப்பிடப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, இத்தேர்தலை நடத்த உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணைகளை நீதிபதிகள் என்.ஜி.அமரதுங்க, எஸ்.ஐ. இமாம், பிரியசாத் தீப் ஆகியோர் முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

யுனைட்டெட் சதர்ன் கிரிக்கெட் கழகத்தின் தலைவர் எம்.எஸ்.அசோக மெண்டிஸ் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை கடந்த வருடம் ஒக்டோபர் 11 ஆம் திகதி தாக்கல் செய்திருந்தார்.

கிரிக்கெட் சபை தொடர்ச்சியாக இடைக்கால நிர்வாகக் குழுக்கள் நிர்வகிப்பதற்கு இடமளிக்காமல் நிர்வாகிகளை தெரிவு செய்வதற்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என அவர கோரியிருந்தார்.

கிரிக்கெட்டினதும் நாட்டினதும் நலன் கருதி 3 மாத காலத்திற்குள் இத்தேர்தலை நடத்துவது குறித்து ஆராயுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு கடந்த மே 9 ஆம் திகதி உயர் நீதிமன்றம் ஆலோசனை கூறியிருக்கிறது.

இத்தேர்தலை ஜனவரி 3 ஆம் திகதி நடத்த தற்போது விளையாட்டுத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அஷ்வினுக்கு சர்வதேச விருது

(சென்னை)




மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்திய அணியின் சுழற்பந்துவீச்சாளர் அஷ்வினுக்கு திலீப் சர்தேசாய் விருது வழங்கப்படுகிறது.

சமீபத்திய மேற்கிந்திய தீவுகள் டெஸ்ட் தொடரில் முதன் முதலாக வாய்ப்புப் பெற்றவர் அஷ்வின். இதில் 22 விக்கெட்டை கைப்பற்றிய இவர் துடுப்பாட்டத்தில் ஒரு சதம் உட்பட 121 ஓட்டங்கள் எடுத்து தொடர் நாயகன் விருதை தட்டிச் சென்றார்.

இதுகுறித்து இந்திய கிரிக்கெட் சபை வெளியிட்ட அறிக்கையில், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அசத்திய அஷ்வினுக்கு, 2011-12ஆம் ஆண்டின் சிறந்த வீரர் விருது வழங்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 இலட்சம் ரூபா மற்றும் கோப்பை அடங்கிய இந்த விருது எதிர்வரும் டிசம்பர் 10ஆம் திகதி சென்னையில் நடக்கும், இந்திய கிரிக்கெட் சபை விருது வழங்கும் விழாவில் இவ்விருது வழங்கப்படவுள்ளது.

# மீண்டும் போட்டிகளில் கலந்துகொள்வேன்



விரைவில் மீண்டும் கிரிக்கெட் போட்டிகளுக்குத் திரும்ப எதிர்பார்த்துள்ளதாக மேற்கிந்திய தீவுகள் அணியின் சகலதுறைவீரர் டுவைன் பிராவோ தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள பிக்பாஷ் லீக் தொடரில் தம்மால் விளையாட முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சிட்னி சிக்ஸர்ஸ் அணிக்காக டுவைன் பிரவோ ஒப்பந்தம் செய்துள்ளதுடன், கரீபியன் இருபதுக்கு-20 கிரிக்கெட் தொடரிலும் விளையாட எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் கணுக்கால் உபாதை காரணமாக டுவைன் பிராவோ போட்டிகளில் பிரகாசிக்க தவறியிருந்தாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ரென்னிஸ் இரட்டையர் பிரிவில் போபண்ணா பின்னடைவு

(புதுடில்லி)



ஏ.டி.பி., ரென்னிஸ் ரேங்கிங் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் ரோகன் போபண்ணா 11 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டார்.

ரென்னிஸ் அரங்கில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான ரேங்கிங் (தரவரிசை) பட்டியலை, ஏ.டி.பி. நேற்றுமுன்தினம் வெளியிட்டது. இதில் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோகன் போபண்ணா, ஒரு இடம் பின் தங்கி 11ஆவது இடம் பிடித்தார்.

அண்மையில் முடிந்த ஏ.டி.பி., “வேர்ல்டு டூர் பைனல்” ரென்னிஸ் இரட்டையரில் போபண்ணா-குரேஷி ஜோடி மூன்று “ரவுண்டு ராபின்” போட்டியிலும் தோல்வி அடைந்ததே பின்னடைவுக்குக் காரணம். இத்தொடரில் அரையிறுதி வரை முன்னேறிய இந்தியாவின் லியாண்டர் பயஸ் (8ஆவது இடம்), மகேஷ் பூபதி (7ஆவது இடம்) தங்களது இடத்தை தக்க வைத்துக் கொண்டது. இரட்டையர் பிரிவு அணிகளுக்கான ரேங்கிங்கில் பயஸ்-பூபதி ஜோடி 4ஆவது, போபண்ணா-குரேஷி ஜோடி 5ஆவது இடத்தில் நீடிக்கின்றன. ஒற்றையர் பிரிவில் இளம் இந்திய வீரர் சோம்தேவ் தேவ்வர்மன், ஒரு இடம் முன்னேறி 84 ஆவது இடத்தில் உள்ளார்.

பெண்களுக்கான டபிள்யு.டி.ஏ., ரேங்கிங்கில், இந்தியாவின சானியா மிர்சா ஒற்றையரில் 87 ஆவது, இரட்டையரில் 11 ஆவது இடத்தை தக்கவைத்துக் கொண்டார்.

# வெள்ளி வென்றார் விகாஸ்

(லண்டன்)

லண்டனில் நடக்கும் சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியில், காயம் காரணமாக வில்கிய இந்திய வீரர் விகாஸ் கிருஷ்ணன் (69 கி.கி.) வெள்ளிப் பதக்கம் வென்றார்.


லண்டனில், சர்வதேச குத்துச்சண்டைப் போட்டிகள் நடக்கின்றன. இதில் ஆண்களுக்கான கி.கி., எடைப்பிரிவு இறுதியில் இந்தியாவின் விகாஸ் கிருஷ்ணன், சீனாவின் குயாங் மைமைடிடுயர்சனைச் சந்திக்க இருந்தார். ஆனால் அரையிறுதியின் போது இடது கை மணிக்கட்டுப் பகுதியில் ஏற்பட்ட காயம காரணமாக, போட்டியிலிருந்து விலகினார்.

இதனால் சீன வீரர் மைமைடிடுயர்சன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார். விகாஸ் கிருஷ்ணன் வெள்ளிப் பதக்கம் பெற்று ஆறுதல் அடைந்தார்.




# மீண்டும் இடம்பிடித்தார் திலான் சமரவீர

(கொழும்பு)



. தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இலங்கை குழாமில் திலான் சமர வீர இணைக்கப்பட்டுள்ளார்.


இதற்கான அனுமதியை நேற்றுக் காலை வழங்கியதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் சிரேஷ்ட வீரர்களுடன் நேற்றுக் காலை தாம் கலந்துரையாடியதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் தேர்வுக்குழு உறுப்பினர்களும், இலங்கை கிரிக்கெட் நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் அறிவிக்கப்பட்ட டெஸ்ட் குழாமில் திலான் சமரவீர இடம்பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா புறக்கணிக்காது



(புதுடில்லி)

லண்டன் ஒலிம்பிக் போட்டியைப் புறக்கணிக்கும் எண்ணம் இல்லை என்று இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் விஜய் குமார் மல்கோத்ரா தெரிவித்துள்ளார்.

ஒலிம்பிக் போட்டி லண்டனில் 2012 ஜுலை 27 முதல் ஒகஸ்ட் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இப்போட்டியை டவ் கெமிக்கல் நிறுவனமும் இணைந்து நடத்துகிறது. இந்த நிறுவனம்தான் போபாலில் 1984இல் ஏற்பட்ட விஷவாயுக் கசிவு ஏற்பட்ட யூனியன் கார்பைடு நிறுவனத்தை இப்போது நடத்தி வருகிறது.

இந்தியாவில் ஆயிரக்கணக்கானோரின் மரணத்துக்குக் காரணமாக இருந்த இந்த நிறுவனம் இணைந்து நடத்தும் ஒலிம்பிக் போட்டியில் இந்தியா கலந்து கொள்ளக்கூடாது என்று இந்தியாவில் பல்வேறு விளையாட்டு அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்தன.

இந்நிலையில் இது தொடர்பாக மல்கோத்ரா டில்லியில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஒலிம்பிக் போட்டியில் டவ் கெமிக்கல் நிறுவனம் இணைவதற்கு இந்தியாவில் எழுந்துள்ள எதிர்ப்பு தொடர்பாக சர்வதேச ஒலிம்பிக் சங்கத்துக்கு கடிதம் எழுத இருக்கிறேன். ஆனால் இப்போதைய சூழ்நிலையில் டவ் கெமிக்கலை நீக்க வேண்டும் என்று வலியுறுத்த முடியாது. இந்தப் பிரச்சினையில் இந்தியாவின் எதிர்ப்பு வலுவாக தெரிவிக்கப்படும். அதற்காக ஒலிம்பிக் போட்டியை இந்தியா புறக்கணிக்கமாட்டாது எனத் தெரிவித்தார்.

# நியூசிலாந்து வீரர் ஜெஸ்ஸி சாதனை

அவுஸ்ரேலிய “ஏ” அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் நியூசிலாந்தின் ஜெஸ்ஸி ரைடர் 16 சிக்ஸர்களை அடித்து சாதனை படைத்துள்ளார்.

இதன்மூலம் முதல் தர கிரிக்கெட்டில் ஓர் இன்னிங்ஸில் அதிக சிக்ஸர்(16 சிக்ஸர்கள்) அடித்த இங்கிலாந்தின் கிரஹாம் நேப்பியர், அவுஸ்ரேலியாவின் ஆண்ட்ரூ சைமண்ட்ஸ் ஆகியோரின் சாதனையை சமன் செய்தார்.


அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்பதற்காக அங்கு சென்றுள்ள நியூசிலாந்து அணி, அந்நாட்டின் “ஏ” அணியுடன் பயிற்சி ஆட்டத்தில் விளையாடியது.

இதில் இரண்டாவது இன்னிங்ஸில் 5ஆவது வீரராக களமிறங்கிய ரைடர் 137 பந்துகளில் 16 சிக்ஸர், 11 பவுண்டரிகளுடன் 175 ஓட்டங்கள் குவித்தார்.

. அவுஸ்ரேலிய - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வரும் டிசம்பர் முதலாம் திகதி கப்பாவில் தொடங்குகிறது.



# உலக நாடுகளில் பாதுகாப்புக்கு ஏற்படுகின்ற சவால்களை எதிர்கொள்ள சர்வதேச இன்டர்போல் ஒத்துழைப்பு




(கொழும்பு)

உலக நாடுகளில் பாதுகாப்புக்கு ஏற்படுகின்ற சவால்களை எதிர்கொள்வதற்கும், அதனைக் கையாள்வதற்கும் தேவையான பாரிய ஒத்துழைப்புக்களை இன்டர்போல் சர்வதேச அளவில் பொலிஸாருக்கு வழங்குவதாக இன்டர்போலின தென்பசுபிக் மற்றும் ஆசியாவுக்கான தேசிய மத்திய பணியகத்தின் செயலாளர் நாயகம் ரவூப் அத்தல்லா தெரிவித்தார்.


இன்டர்போலுடன் செயற்படுகின்ற தேசிய மத்திய பணியகத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆசிய மற்றும் தென் பசுபிக் நாடுகளைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகளுக்கான 10 ஆவது பிராந்திய பயிற்சிப் பட்டறை நேற்றுமுன்தினம் கொழும்பில் ஆரம்பமானது. கொழும்பு கலதாரி ஹோட்டலில் ஐந்து நாள் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கின் ஆரம்ப உரையின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும், உலகளாவிய ரீதியில் 190 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட இன்டர்போல் களவாடப்பட்ட அல்லது தொலைந்த பயண ஆவணங்கள், களவாடபபட்ட மோட்டார் வாகனங்கள், நிர்வாக ஆவணங்கள், டி.என்.ஏ. தகவல்கள், விரல் அடையாளங்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான பல மில்லியன் தகவல்களைக் கொண்டுள்ளன. உலகளாவிய ரீதியில் பொலிஸார் குற்றப்புலனாய்வு விசாரணைகளுக்குத் தேவையான தரவுகளை இவற்றிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவித்தார்.

பொது மக்களின் பாதுகாப்பு, பயங்கரவாதம், போதைவஸ்து, குற்றச் செயலகளில் ஈடுபடும் அமைப்புக்கள், ஆட்கடத்தல், நிதி, உயர்தொழில்நுட்பம் மற்றும் ஊழல் போன்ற ஆறு விடயங்கள் தொடர்பில் இன்டர்போல் தரவுகளைப் பதிவு செய்துள்ளன என்றும் தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு பொறுப்பான சிரேஷட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் குற்றப்புலனாய்வு பிரிவுக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜயந்த குணதிலக்க, குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர், பொலிஸ் அத்தியட்சகர் மஹேஷ் பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அநுராதபுரம் தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம்



(கொழும்பு)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ்க் கைதிகள் நேற்று முன்தினம் சிறைக்காவலர்களால் தாக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டி, அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கோரி சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும், இனிமேல் இப்படியான நிகழ்வுகள் நடக்காமல் இருப்பதை உறுதி செய்யுமாறு கோரியும் அவர்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். ஆனால், கைதிகளைப் பாதுகாவலரகள் வழமையான சோதனைகளைச் செய்ய முயன்றபோது அவர்களிடம் இருந்து 19 கைத்தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக சிறைச்சாலைகள் அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகரான சிவலிங்கம் சதீஷ்குமார் தெரிவித்தார்.

அந்த நடவடிக்கையின் போதே அங்கு அமைதியீனம் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இருந்த போதிலும், இந்தச் சம்பவம் குறித்து முழுமையாக விசாரணை செய்வதற்காக அதிகாரிகள் குழுவை தமது அமைச்சு அங்கு அனுப்பியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இரண்டு நாளில் 15 இலட்சம் வருமானம்

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் ஊடாக இதுவரையில் 15 இலட்ச ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணிக்குள் குறித்த வீதியின் ஊடாக ஏழாயிரத்திற்கும் அதிகமான வாகனங்கள் பயணித்துள்ளதாக அதன் தலைவர் ஆர்.டபிளயூ.பிரேமசிறி தெரிவித்தார். அதிவேக வீதியின் வீதிச்சட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு விசேட பொலிஸ் குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை பொலிஸாரின் அனுமதி கிடைத்தவுடன் தெற்கு அதிவேக வீதியில பேருந்துச் சேவைகளை ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் எம்.டி.பந்துசேன அறிவித்துள்ளார். ஏற்கனவே இரண்டு பேருந்துகள் அந்த வீதியூடாக போக்குவரத்தில் ஈடுபடுவதாக மேலும் தெரிவித்தார்.

# — நீதவான்கள் ஆட்சேர்ப்பில் — தமிழ் பேசுவோர் இருவரே தெரிவு

(கொழும்பு)

நீதிச் சேவை ஆணைக்குழுவினால் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட 17 நீதிமன்ற நீதவான்களில் தமிழ் பேசுபவர்கள் இருவரே தெரிவு செய்யப்பட்டனர். வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் நீதவான் நீதிமன்றங்களும், சுற்றுலா நீதிமன்றங்களும் புதிது புதிதாக அமைக்கப்பட்டு வரும் நிலையில் இந்த ஆட் குறைப்பு நீதவான்களுக்கான பற்றாக்குறையை ஏற்படுத்தும் எனவும், இது விடயத்தில் சம்மந்தப்பட்ட அமைச்சர் கவனமெடுத்து வடக்கு, கிழக்கிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆவன செய்ய வேண்டும் எனவும் சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்துள் ளனர்.

எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதி முதல் கொழும்பில் நடைபெறவுள்ள ஒருமாத பயிற்சியின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட 17 நீதவான்களும் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர் எனத் தெரியவருகிறது. இதேவேளை நாட்டிலுள்ள நீதவான் நீதிமன்றங்களுக்கான ஆட்சேர்ப்பில் சிறுபான்மையினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டமைக்கு சட்டவல்லுனர்களும், சட்டத்தரணிகளும் கவலை தெரிவித்துள்ளனர்.

## சொத்து விபரம் அளிக்காதவர்களுக்கு சட்ட நடவடிக்கை



(கொழும்பு)

கடந்த ஒக்டோபர் 8 ஆம் திகதி இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில போட்டியிட்டு வெற்றி பெற்ற வேட்பாளர்களின் சொத்து மற்றும் பொறுப்பு விபரங்களை வெளியிடும் கால அவகாசம் கடந்த 25 ஆம் திகதியுடன் நிறைவுற்றது.

சொத்து விபரங்களை வெளியிடாத, வெற்றிபெற்ற வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். இதற்கு முன்னர், ஒக்டோபர் 30 ஆம் திகதி வரை இதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

அந்தக் கால அவகாசத்தின் போது உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவான 420 உறுப்பினர்களில் 410 பேர் தமது சொத்து விபரங்களை வெளியிட்டிருந்தனர்.

## பொலிஸ் சேவையில் பத்தாயிரம் வெற்றிடம்

(கொழும்பு)

நாட்டில் சுமார் பத்தாயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடம் நிலவி வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் சேவைக்கு 92023 உத்தியோகத்தர்கள் தேவைப்படுவதாகவும், தற்போது 83423 உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதில் 81328 பேர் சிங்கள உத்தியோகத்தர்கள் எனவும், 1093 உத்தியோகத்தர்கள் தமிழர்கள் எனவும், 952 முஸ்லிம் உத்தியோகத்தர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் பொலிஸ் மா அதிபரின் பரிந்துரையின் அடிப்படையில் புதிய பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

## அனைத்து ரயில் நிலையங்களிலும் மும்மொழி அறிவிப்பு கட்டாயம்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள அனைத்து ரயில் நிலையங்களிலும் ரயில் போக்குவரத்துத் தொடர்பான தகவல்களை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அறிவிக்க வேண்டியது கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது.

சில ரயில் நிலையங்களில் ரயில் போக்குவரத்துக்கள் குறித்து மும்மொழிகளிலும் அறிவிப்பு செய்யப்படுவதில்லை என முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதென அரச மொழிக் கொள்கை ஆணைக குழு தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து அறிவிப்பாளர்களை பயிற்சிக்கும் செயற்திட்டமொன்று நேற்றும் இன்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இடம்பெறுவதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக இணைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ரயில் நிலைய அறிவிப்பாளர்கள் 50 பேர் பயிற்றுவிக்கப்படவுள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.

## அனுருத்த ரத்வத்த மீதான வழக்கு முடிவுக்கு வந்தது

முன்னாள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அநுருத்த ரத்வத்த மீது தாக்கல் செய்யப்பட்டிருந்த லஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் விசாரணைகளை நிறைவுக்குக் கொண்டுவர கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்தது. குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அநுரத்த ரத்வத்த உயிரிழந்ததாக மரணச் சான்றிதழை சட்டத்தரணி நேற்று நீதிமன்றில் சமர்பித்தார். பிரதான சந்தேகநபர் உயிரிழந்துள்ளதால் விசாரணைகள் நிறைவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என அரச சட்டத தரணி குறிப்பிட்டார். இந்தக் கருத்துக்களை பரிசீலித்த மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ வழக்கு விசாரணையை முடிவுக்குக் கொண்டுவர தீர்மானித்தார்.




கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் பெயர்ப் பலகையில் "கொழம்பு"

**Test –10**

**Read the information about Mr.Maylvaganam Nallathamby and fill in the Season Ticket for him**

Mr. Maylvaganam Nallathampy, Quality Control Assistant Of K.K.S Cement Corporation is residing at 62, Ramakrishna Road, Kokuvil. As he is entitled for a half rate season ticket, He likes to get one for the month of March. Now he can go to work just one hundred and fifty rupees. Otherwise he has to spend rupees eight - for every travel to K.K.S and from K.K.S. In that case he has to spend more than three hundred and twenty rupees. Now he is very happy.

**APPLICATION FOR SEASON TICKET**

| | |
|---|---|
| Name in Full | :.................................................................... |
| One Way Bus | :.................................................................... |
| Fair | :.................................................................... |
| Traveling | :.................................................................... |
| From | :.................................................................... |
| Department | :.................................................................... |
| Month | :.................................................................... |
| Designation | :.................................................................... |
| Private Address | :.................................................................... |
| Official Address | :.................................................................... |
| Value of the Season | :.................................................................... |
| Ticket | :.................................................................... |

**Test – II**

**Read the following classified advertisements and answer the questions given below.**

130 ------------------------------
Birds, Pets & Fish

**Beautiful** Kittens free to kind homes 15, Thelawal Road, Ratmalana.
Z4.86

**Young Parrots** for, taming and talking Finches, javas 650/=, Nekton vitamin Cat/ Dog 35G - 250/= cages and more birds. Contact 749545.
Z685

140 ------------------------------
**Sports & Games**

**Space walker** hardly used .expect 4000/=. Phone office 1393841, Residence 588444.
Z9648

Two **new** Golf Bags with attached carts and set of clubs for beginners. Call 605648.
Z9648

**Books & Magazines For sale**

**Computer Books** cheap edition clearance sale at half price, Bobe Agencies Limited, 80, Reclamation Road, Colombo. Tel. 821009
Z 1861

**Magazines,** Newspapers from India and Sri Lanka magazines, story books newspapers, school text books delivered at home. P. Sara, 16,Bandaranayaka Mawatha, Colombo 12, 696433, 510036.

149 ------------------------------
**Positions Vacant: Sales Personnel**

Sales Assistants (female) for ladies dress shop at Fashion City. Should be fluent in English below 30 years. Salary over 5000/= per month. Interview Monday, Tuesday 4 - 5 p.m. Shop No. 41, Fashion City.
Z 76

**Salesmen** for electronic car/ stereos VC[) players etc. Walk-in interview 20th after 2.00 p.m. Alka Tech, No. 75, First Lane, Kirullapona.
**Z9673.**

181 ------------------------------
**Board & Lodging Wanted**

*A* **working** student girl from Kandy doing higher studies .needs a room with attached bath or an annex from Havelock Town, Borella, Thimbirigasyaya, Kirullapona in a secure surrounding. Contact 08-213





**General Certificate of Education (Ord.Level) Examination, December- 2011** | Time: 3 Hour


# கல்வி முரசு

## ENGLISH LANGUAGE PART - I

யாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்

**Test - 01**

**Study the picture and fill in the blanks. Ilse the prepositions given in the box. The first one is done for you.**



| down | of | into | across | up | along |
|---|---|---|---|---|---|

The man goes out (1) ..........of..........the house (2) the road (3) .............. the steps (4) ..................................the bridge (5)...........................the steps and (6) .....................the shop.

**Test - 02**

**Find the required information from the advertisement and write them in the blanks.**

**JOB VACCANCIES**

Wanted boys around 20 years with A/ L, who like to travel and meet new people, to work as tour guides in an international tourist agency in Colombo. Good knowledge of English is essential. Training will be provided.

Please call on 0779398861
Between 9.00 am -5.00 pm on working days.
Or mail to expo@ hotmail.com

(1) What is the advertisement about?
..................................................................
(2) Who can apply
..................................................................
(3) How can be contacted
..................................................................
(4) Place of work
..................................................................
(5) Necessary qualifications
..................................................................

**Test - 03**

**Complete the dialogde. Select the correct response from the box given below.**

Shirani: Hello! How are you?

Thamara:............................................................................................

Shirani: Fine thanks. Did you bring my umbrella?

Thamara:...................................... by the way, Where were you last Friday?

Shirani:....................................................................................................

Thamara:I came on Friday and borrowed an interesting book. I have finished reading it.


Shirani:....................................................................................................

Thamara: Ok. It's in my bag ..........................................................................

* Let's go in now
* I'm fine Thank you and you...?
* Then can I borrow it
* Yes of course
* I was at home

**Test – 04**

**Here is the Toh family in their living room. Look at the picture carefully and write five meaningful sentences.**




..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

**Test – 05**

**Write a paragraph of 5 sentences about Alex Roy . Follow the example.**

Jorge Dias is an accountant. He is working in Sri Lanka Telecom. He studied accountancy in Colombo Accounting Academy. He is getting 50000/- form his job. He has been working in Sri Lanka Telecom for ten years.

| Name | Job | Employer | Studied at | Income | Service |
|---|---|---|---|---|---|
| Alex Roy | Doctor | Lanka hospital | University of Peradeniya | 45000/- | 10 years |



**Test — 06**

**Write a paragraph on one of the following. Use about 50 words.**

My mother / father    My favourite, teacher    My best friend

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

**Test – 07**

**Read the following text and answer the questions given below the passage.**

Every year, millions and millions of Monarch butterflies fly 4,000 km from Canada to Mexico and then 4,000 km back again. They fly 45 km every day for three months. They go to Mexico because it is cold in Canada. They are in Mexico for six months, from October to April. In Mexico, they lay their eggs and then they die. In April, the new butterflies start to fly back to Canada. There, they lay their eggs and then the die. The new butterflies then fly to Mexico. Monarch butterflies always go to the same places in Mexico and to the same trees. How do they know the way? Why do they go to the same trees? Only the Monarch butterfly knows.

1. Why do Monarch butterflies fly to Mexico every. year?...............................................
2. For how many months do they stay in Mexico?...............................................
3. What happens to the butterflies after they lay their eggs?...............................................
4. Fill in the blanks In Mexico Monarch butterflies always go to the same .............and to the same
5. According to this passage what is the distance from Canada to Mexico?...............................................

**Test - 08**

Imagine that you are the secretary of the student's union and going to start a coaching camp to students of your school who are interested in playing cricket. Write a notice for students to inform them. Include the following points.

- the day/ date / time / venue
- information about the coacher /s
- benefits by the coaching camp

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

**Test – 09**

**Read the following and underline the correct word that fills the blank. The first one is done for you.**

1) The hotel renders a great....................(servise, serve, <u>service)</u> to both local and foreign guests.

2) Dr. C.W.W. Kannangara was an eminent Sri Lankan.....................(education, educationist, educator)


3) Both economic development and....................(spiritual, spiritually, spirit) progress went hand in hand.

4) Reading books is....................(interesting, more interesting, most meresting) than collecting stamps.

5) Mrs. Brown followed by the waiter's directions....................(careful, care, carefully)

6) Applicants'should,have the ....................(following, follow, follows) qualifications.

# யாதும் ஊரே



சிறு வயதில் நாம் வாழ்ந்த மண் மற்றும் நம்மோடு வாழ்ந்த மனிதர்கள் மீது வாழ்க்கை முழுவதும் அந்த இனம் புரியாத ஈரப்பு இருந்து கொண்டே இருக கிறது. அவ்விடங்களையும் ஆட்களையும் விட்டு வெகு தொலைவு வந்து முற்றிலும் மாறுபட்ட வாழ்க்கை முறைகளுக்கு அடிமையான பின்பும் அந்த நினைவுகள் நம் மனதில் கறுப்பு வெளைக் காட்சிகளாக வந்து சென்று கொண்டே இருக்கின்றன. பிற் காலத்தில் அதே மண்ணில் அதே மக்களோடு அதே மாதிரியான ஒரு வாழ்க்கையை, சற்று நமமுடைய வெளி வாழ்க்கை முறைகளையும் கலந்து, வாழ வேண்டும் என்ற எண்ணம் அப்படி வெளியேறி வந்த எல்லோருக்குமே இருப்பது போலத்தான் தெரிகிறது. எதார்த்தம் என்ன வென்றால் இது நினைவாகவே இருந்து விடுவதுதான் அதிக சுகம். தப்பித் தவறி அதை நனவாக்கக் கிளம்பிப் போனவர்கள் யாரும் நினைவில் இருந்த அளவு [illegible] நிசத்தில் இருந்ததாக அனுபவித்துச் சொன்னதில்லை. "அப படியே பெருநகர இரைச்சலிலேயே ஓட்டியிருந்தால் இதமான நினைவுகளாவது சாகும் வரை அவ்வப்போது மனதை வருடி மகிழ்ச்சிப் படுத்திக் கொண்டே இருந்திருக்குமே" என்று பெட்டி படுக்கைகளைச் சுருட்டிக் கொண்டு திரும்ப ஓடி வந்தவர்கள்தாம் நிறைய.

காரணம் என்ன? நம் எளிய மொழியில் சொல்வதென்றால், நம் புதிய வாழ்க்கை முறை அங்கேயே இருந்து விடுகிற மக்களுடையதை விட ஆடம்பரம் அதிகமானதாக - அவர்களால் அடைய முடியாததாக - பொறாமை படத் தக்கதாக - பம்மாத்துப் பண்ணக் கூடியதாக இருக்கிறது. நாம் வெளியேறி வந்து புதிது புதிதான வாழ்க்கை முறைகளைப் பழகி விட்ட பின்பு, அவர்களைப் போலவே - அவர்களில் ஒருவராக வாழ இயலாதவர்களாகி விடுகிறோம். இது கிட்டத்தட்ட கருவான பின் கடலுக்குள் தூக்கிப் போட்டு நீந்தச் சொல்வது போல். முடியுமா அது?

பழையன கழித்தல் மேற்கர்களுக்கு ஓரளவு எளிதாக இருக்கிறது. நம்மில் சிலருக்கும் இது எளிதாகவே இருக்கிறது. நமக்குப் பிடித்தாலும் பிடிக்கா விட்டாலும் அப்படிப் பட்டவர்களுக்குத்தான் புறவாழ்க்கை வெற்றி எளிதில் கிடைக்கிறது. அதாவது, பொருளியல் வெற்றி! "எது வெற்றி என்பதே என்னைப் பொறுத்தமட்டில் வேறு!" என்று சொல்பவர்கள் இங்கே காதைப் பொத்திக் கொள்ளவும். நம்மைப் போன்ற சாமானியர்களுக்கு இதுதான் கசப்பான உண்மை. இதைப் புரிந்து கொளல் மிக எளிதான ஒன்றுதான். தாய்ப்பாசம் அதிகமுள்ள குழந்தை அம்மா காலைச் சுற்றிக் கொண்டே வருமே ஒழிய திரைகடலோடித் திரவியம் கொண்டு வராது. இந்தப் பிணைப்புகளுக்கெல்லாம் ஆட்பாடாத ஆட்கள்தாம் அத்தகைய வெற்றிகளை எளிதில் அடைய முடிகிறது. அதனால்தான் நம் ஊர்களில், 'இந்த ஊரை விட்டுப் போனால்தான் முன்னுக்கு வரமுடியும்!" என்று நிறையப் பேர் அடிக்கடி சொல்கிறார்கள்.

இந்த மண்ணன்பு ஒருபுறம் நம் இலக்கியங்களிலும் திரைப் படங்களிலும் புனிதமானதாகவும் உணர்ச்சிபூர்வமானதாகவும் சித்தரிக்கப்படுகிறது. இன்னொரு புறம் நம் எதார்த்த வாழ்வில் இது ஒரு "இத்துப்போன" பண்பாகப் பேசப்படுகிறது. புனிதத்துக்கும் உணர்ச்சிக்கும் ஏகபபட்ட காரணங்கள் சொல்ல ஏகப்பட்ட ஆட்கள் இருக்கிறார்கள். அது ஏன் ஒரு இத்துப் போன பண்பாகப் பார்க்கப் படுகிறது என்பதை மட்டும் நாம் பார்ப்போம். மண்ணையும் மக்களையும் மதிக்கக்கூடாது என்று சொல்ல விழைவதல்ல நம் நோக்கம். அந்த போதைக்கு அடிமையாக வேண்டியதில்லை என்பதே நான் சொல்ல முனைவது. இதைச் சரியாகப் புரிந்து கொண்டால் நன்மை பயக்கும்.

பூர்வீகம் என்பதே மனித குலத்தின் குணாதிசயத்துக்கு எதிரானது. நிறையப் பேர் சொல்வது போலச் சொன்னால், இயற்கைக்கு எதிரானது. மாற்றம்தான் இயற்கை. இன்னும் சொல்லப்போனால் செயற்கைதான் இயற்கை. 'என்னடா திடீரென்று மெண்டல் போலப் பேச ஆரம்பித்துவிட்டாய்?" எனறு குழம்புகிறீர்களா? மனிதனுக்குக் கால்கள் இருப்பது இடம் விட்டு இடம் பெயரவும், கைகளும் மூளையும் இருப்பது அதையே எளிதாக்கிக் கொள்ளவும் அதற்கான புதுப்புதுக் கண்டுபிடிப்புகளைச் செய்யவுமே.

நீண்ட நெடிய மனித குலத்தின் வாழ்வில் எல்லா மண்ணுமே ஒவ்வொரு காலத்தில் வாழ்க்கைக்கு வசதியில்லாததாக ஆகத தான் செய்கிறது. தட்ப வெப்பமோ; பஞ்சமோ, வெள்ளமோ, வளத்தின் காரணமாக ஒரே இடத்தில் அளவுக்கு அதிக மான ஆட்கள் குவிதலோ, மாற்றம் நாடும் மனித மனமோ என்று ஏதோவொரு காரணமாக அந்த இடம் முன்புபோல வாழ வசதியில்லாததாக ஆகி விடுகிறது. அந்தச் சூழ்நிலையில் இடப் பெயர்ச்சி நடந்தே தீரும். அது மனித வரலாற்றில் பற்பல முறைகள் நடக்கவே செய்திருக்கிறது. சில இடப் பெயர்ச்சிகள் மிகச் சிறியவை - குறைவான தொலைவுக்குள் நிகழ்பவை. சில இடப்பெயர்ச்சிகள் மிகப் பெரியவை - கண்டம் விட்டுக் கண்டம் செல்லும் அளவுக்குத் தொலைவானவை.

நாம் எல்லோருமே இன்று நம் சொந்த ஊர் என்று சொல்லிக் கொண்டிருப்பது எதுவுமே நம் சொந்த ஊர் அல்ல. ஓரளவுக்கு இருப்பதிலேயே பழைய சொந்த ஊர் எது வென்று கண்டு பிடிக்க வழி - நம் குலதெய்வ வழிபாடு. குல தெய்வம் என்று ஒன்று கொண்டுள்ள எல்லோருக்குமே அந்த ஊர்தான் சொந்த ஊர். பஞ்ச காலத்தில் நீண்ட தொலைவுக்கு இடம் பெயர்ந்த - அதாவது, பஞ்சம் பிழைக்கக் கிளம்பிய குடிகள் எல்லோரும் செய்த இனனொரு வேலை என்ன வென்றால், அவர்களுடைய அப் போதைய தாய் மண்ணை விட்டுக் கிளம்பும் வேளையில் அங்கிருந்த குல தெய்வ ஆலயத்து மண்ணை எடுத்துக் கொண்டு சென்று சேர்ந்த இடத்தில் ஓரிடத்தில் அதே கோவிலை மீணடும் கட்டி எழுப்பிக் கொண்டார்கள். அல்லது, பின்னர் போன இடத்திலிருந்து ஒருவரோ ஒரு குழுவோ கிளம பித் தாய மண்ணுக்கு வந்து மண் எடுத்துச் சென்றார்கள் எனறு எம் குல வரலாறுகள் சொல்கின்றன.

இப்படித்தான் மனித குலம் இன்று வரை வாழ்ந்து வருகிறது என்பது என் புரிதல். இப்போது சொல்லுங்கள் - பூங்குன்றனார் சும்மாவா சொன்னார்? யாதும ஊரே யாவரும் கேளிர் என்று! எல்லாம் ஓர் அர்த்தத் தோடுதான் நம் முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று எல்லோரையும் போல் நானும் ஒருமுறை சொல்லி விடுகிறேனே! எனவே, யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று நாம் கருதவேண்டும் என்று மட்டுமே அவர் சொனனதாக எனக்குப்படவில்லை. அதுதான் உண்மை என்றே அவர் சொல்லியிருக்கக் கூடும் என்பது என் ஊகம். அதனால்தான் ஐ.நா. சபை அதைத் தம் வாசகமாக ஏற்றுக் கொண்டிருக்கவேண்டும்.

இவையனைத்துக்கும் மேல், பால்யப் பருவ நினைவு என்பது இருந்து கொண்டே இருக்கட்டும். ஆண்டுக்கு ஒருமுறை குலதெய்வத்தை வழிபட்டு விட்டு, மண்ணையும் மக்களையும் கண்டு களித்து விட்டு, அவர்களோடு ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டு விட்டு, மீண்டும் அவ்வப்போதைய இருப் பிடத்துக்கு மீண்டு வந்து, அந்த அனுபவங்களைப் பற்றிச் சிலாகித்துப் பேசிக் கொண்டிருந்து விட்டு, ஆக வேண்டிய வேலை யைப் பார்ப்பதுதானே அதை விட சுகம்?! முடிந்தால் அவர்களையும் வாழ்வுக்கான வசதிகள் அதிகம் இருக்கும் பகுதிகளுக்கு அழைத்து வந்து வெவ்வேறு உலகங்களைக் காட்டிக் களித்தல் அதையும் விட சுகம். அதை விடுத்து, அங்கேயே போய் அவர்கள் கண் முன்னாலேயே - அவர்களுக்குப் பிரயோசனமாகவும் இல்லாமல் - அவர்களின் கண் உறுத்தும்படி வாழ்வதுதான் சுகம் என்று சொல்வது, "சொல்லத்தான் சுகம்" என்றே படுகிறது.

- ஜா.பாரதிராஜா

# புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம்

9

- டி.பி.எஸ்.ஜெயராஜ்

அவர்களில் பெரும்பாலானவர்கள் அரசியல் மற்றும் புலனாய்வுப் பிரிவுகளைச் சோந்தவர்கள். நெடியவன் நோர்வேயில் வதிவிடத்தை அமைத்துக் கொண்டார். சிவகௌரியுடன் ஏற்படுத்திக் கொண்ட திருமணக் கூட்டு எல்.ரீ.ரீ.ஈ யுடன் இருந்த நெடியவனின் பிணைப்பை மேலும் உறுதியாக்கியது. வெளிநாட்டு செயற்பாட்டாளர்களுடன் தொடர்பாடல்களை ஏற்படுத்துவதற்காக கஸ்ட்ரோ நெடியவனைப் பயன்படுத்திக் கொண்டார்.

யுத்தம் விரிவடைந்தபோது வன்னிக்கும் மற்றும் வெளிநாட்டிலுள்ள புலி அங்கத்தவர்களுக்கும் இடையேயான தொடர்புகள் நலிவடையத் தொடங்கின. எனவே கஸ்ட்ரோ தனக்குப் பதிலாக ஒரு சர்வதேசப் பிரதிநிதியை நியமனம் செய்தார். இந்த நபர் வெளிநாட்டிலுள்ள சகல எல்.ரீ.ரீ.ஈ கிளைகளினதும் ஒட்டு மொத்த பொறுப்பாளியாக இருந்தார். அது நெடியவனைத் தவிர வேறு யாருமில்லை.

ஒரு சமயம் வெளிநாட்டிலுள்ள சகல எல்.ரீ.ரீ.ஈ கிளைக்கும் பொறுப்பாகவிருந்த கே.பி என்கிற செல்வராசா பத்மநாதன் எல்.ரீ.ரீ.ஈ யுடன் திரும்ப இணைந்து கொண்டதும் ஜனவரி 2009 இல் சர்வதேச தொடர்புகளுக்கான தலைவராக நியமிக்கப்பட்டார். பிரபாகரனின் அனுமதியோடு கே.பி இந்த நிலையை பயன்படுத்தி வெளிநாட்டு எல்.ரீ.ரீ.ஈ மீதான தனது கட்டுப்பாட்டை மீளமைக்க முயன்றார். இது கஸ்ட்ரோவை சினமடைய வைத்தது. கஸ்ட்ரோவின் அதிகாரத்தைக் கொண்ட நெடியவன், கே.பி இந்த உலகப் புலித் தலைவராக முயற்சிப்பதை தடைசெய்ய முயன்றார்.

மே 2009 இல் எல்.ரீ.ரீ.ஈ தலைமை அழிக்கப்பட்ட பின்னரும் இந்த எதிர்ப்பு தொடரலாயிற்று. தனது சேவை மூப்பை கணக்காகக் கொண்டு கே.பி தலைமைப்பதவியை கைப்பற்ற முயற்சித்த பொழுது நெடியவனும் அவரது விசுவாசிகளும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். பலத்த வாதப்பிரதிவாதங்களுக்குப் பின்னர் இறுதி யில் சமரசம் எற்படுத்தப்பட்டு கே.பி மீள்கட்டமைக்கப்பட்ட எல்.ரீ.ரீ.ஈயின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். நெடியவன் வெளிநாட்டுக் கிளைகளின் நிர்வாகத்தராக பொறுப்பேற்றார்.

கே.பி மலேசியாவில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடுகடத்தப்பட்ட பின்னர் வெளிநாட்டு எல்.ரீ.ரீ.ஈ கட்டமைப்புகள் மீதான தனது அதிகாரத்தை நெடியவன் மீண்டும் உறுதி செய்த கொண்டார். ஆனால் விரைவிலேயே அங்கு ஒரு புதிய போட்டியாளர் தோன்றினார். அது விநாயகம் என்றழைக்கப்படுகிற சேகரபபிள்ளை வினாயகமூர்த்தி என்கிற எல்.ரீ.ரீ.ஈ புலனாய்வுப் பிரிவின் ஒரு சிரேஷ்ட அங்கத்தவர்.

47 வயதான விநாயகம் என்றழைக்கப்படுகிற சேகரப்பிள்ளை வினாயகமூர்த்தி 1964 நவம்பர் 10 ஆம் திகதி பிறந்தார். அவரது குடும்பம் தென்மராட்சியின் வரணிப்பகுதியிலுள்ள இடைக்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்தது. எவ்வாறாயினும் அவரது குடும்பம் சாவகச்சேரியில் சில வருடங்களாக வசித்து வந்தது.

விநாயகமூர்த்தி தனது 20 ஆவது வயதில் 1985 ஆம் ஆண்டு முறைப்படி எல்.ரீ.ரீ.ஈயில் இணைந்தார். அதற்கு முன் அவர் ஒரு பாடசாலை மாணவராக இருந்தபோது ஒரு எல்.ரீ.ரீ.ஈ உதவியாளராக இருந்திருக்கிறார். அவர் யாழ். குடாநாட்டின் தெற்கு மற்றும் தென்மேற்கு பகுதியிலுள்ள சோறன்பற்று - மாசார் பகுதியிலும் மற்றும் புலோப்பளை - கிளாலிப் பகுதியிலும் உள்ளூர் இராணுவப் பயிற்சியினைப் பெற்றிருந்தார்.

விநாயகம் ஆரம்பத்தில், லொஸ் ஏஞ்சல்ஸ் என்று புலிகளின் சுறறாடலில் அழைக்கப்பட்ட தென்மராட்சிப் பகுதியில் நிலைகொண்டிருந்தார். கேடில்ஸ் அல்லது திலீபன் என்பவர்தான் அச்சமயம் தெனமராட்சிக்கு பொறுப்பாகவிருந்தார். விநாயகம், எல்.ரீ.ரீ.ஈயின் புலனாய்வுப் பிரிவான பொட்டு அம்மான் தலைமை யிலான "புலிகள் அமைப்பின் பாதுகாப்பு புலனாய்வுச் சேவைகள்" (ரி.ஓ.எஸ்.ஐ.எஸ்) பகுதியால் உள்வாங்கப்பட்டார். இப்பகுதி பின்னர் தேசிய புலனாய்வுப் பிரிவு என பெயர்மாற்றம் செய்யப்பட்டது. விநாயகம் இரண்டாவது லெப்ரினனாக பதவி உயர்த்தப்பட்டதுடன் இயன்னா எனும் புதிய இயக்கப் பெயரையும் பெற்றார். விநாயகமூர்த்தி அல்லது இயன்னா 1990-93 காலப் பகுதிகளில் பொட்டு அம்மானின் நேரடிப் பொறுப்பின் கீழ் பணியாற்றினார்.

1994 இல் விநாயகமூர்த்தி லெப்ரினன் ஆகப் பதவி உயர்த்தப்பட்டு வவுனியா மாவட்ட புலனாய்வுப் பிரிவின் தலைவராக வவுனியாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். பின்னர் அவர் கபடன் ஆகத் தரமுயர்த்தப்பட்டு, புதிய கடமைகளை ஏற்று பாரிய கொழும்பு பிரதேசத்துக்கு அனுப்பப்பட்டார். அவர் நீர்கொழும்பு பகுதியில் நிலை கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அவர் நீர்கொழும்பில் தங்கியிருந்த வேளையில்தான் அவரது முதலாவது இலக்கு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. கட்டுநாயக்கா சர்வதேச-விமான நிலையத்தின்மீது 2001 ஜுலை 12 ஆம் திகதி எல்.ரீ.ரீ.ஈயினர் மேற்கொண்ட தாக்குதலுக்கான அடித்தள வேலைகள் யாவற்றையும் பூர்த்தியாக்கும் பாத்திரத்தை இவரே ஏற்றிருந்தார். இந்தப் பணியின் வெற்றிகரமான பெறுபேற்றின் பின்னர், வினாயகத்துக்கு மேஜர் எனும் பதவி உயர்வு பரிசாக வழங்கப்பட்டு வன்னிக்குத் திரும்ப அழைக்கப்பட்டார்.

ஓஸ்லோவின் உதவியுடன் 2002 யுத்த நிறுத்தம் ஏற்பட்டதின் பின்னர், எல்.ரீ.ரீ.ஈயின் புலனாய்வுப் பகுதி வன்னிக்கு வெளியே இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் பணியாற்றும் செயற்பாடடாளர்களின் விடயங்களையும் அதேபோல வெளிநாடுகளிலுள்ளவர்களின் செயற்பாடுகளிலும் அக்கறை செலுத்துவதற்காக ஒரு விசேட வெளிநாட்டு விடயப் பிரிவு உருவாக்கப்பட்டது. இந்த விசேட புலனாய்வுப் பிரிவு 'வெளியக மற்றும் உள்ளக விவகாரங்களுக்கான புலனாய்வுப் பிரிவு' என அழைக்கப்பட்டது.

தொடரும்....

# மயாவதி குடும்ப அரசியலுக்கு தடை

(லக்னோ)

உத்தரப்பிரதேச முதலமைச்சர் மாயாவதி, பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் தனது குடும்ப உறுப் பினர்கள் தேர்தலில் போட்டியிடத் தடை விதித்துள்ளார்.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் அவர் கூறுகையில்,


எனது தாய், தந்தை, சகோதரர், சகோதரி மற்றும் அனைத்து உறவினர்களும், இந்த நேரம் வரை பகுஜன் சமாஜ் குடும்பத்தின் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அவர்களில் யாராவது எம்.பி.யாகவோ அல்லது எம்.எல்.ஏ. வாகவோ விரும்பினால் நான் அவர்களுடனான எனது உறவை முறித்துக் கொள்வேன் என்று தெரிவித்தார்.

நான் எனது குடும்பத்தினருக்கு தகாத முறையில் தனிப்பட்ட சலுகை அளிப்பதாக யாரும் குறை கூறி விடக்கூடாது என்றும் அவர் கூறினார்.



# நெகிழ்ந்தது நெஞ்சம்

(கிருஷ்ணகிரி)



கிருஷ்ணகிரியில் அரசு பஸ் மோதி காளை மாடு ஒன்று இறந்தது. அதனுடன் திரிந்த மாடு இறந்த மாட்டை தலையால் முட்டி எழுப்பியதைப் பார்த்தவர்களின் நெஞ்சம் கனக்க வைத்ததாக தெரியவருகின்றது.

கிருஷ்ணகிரி ஆவின் மேம்பாலம் அருகே, சென்னை தேசிய நெடுஞ்சாலையில் இரண்டு மாடுகள் நின்றன. பெங்களூரிலிருந்து விழுப்புரம் நோக்கி வந்த அரசு பஸ் சாலையில் ஓடித் திரிந்த மாடுகளில், ஒரு காளை மாடு மீது மோதியது. இதில், தலையில் பலத்த காயமடைந்த மாடு, சாலையில் விழுந்து ரத்த வெள்ளத்தில் உயிருக்குப் போராடியது. உடன் இருந்த மாடு பெரும் சத்தத்துடன் சாலையால் விழுந்த மாட்டை தலையில் முட்டி எழுப்பியது. மற்றைய மாடு உடன் வந்து அடிபட்ட மாடு இறந்ததை அறியாமல் முட்டி எழுப்பியதைப் பார்த்தவர்கள் நெஞ்சம் நெகிழ்ந்தனர்.

# கறுப்புப் பணம் பதுக்கியவர்கள் பெயர்கள் வெளியிட மத்திய அரசு முடிவு

(சென்னை)

வெளிநாடுகளில் கறுப்பு பணம் வைப்புச்செய்த பெயர்களை பகிரங்கமாக வெளியிட வேண்டும் என பல்வேறு அரசியல் கட்சிகள் கோரிக்கை வைத்தனர்.

இதற்கு மத்திய அரசு மறுப்புத் தெரிவித்து வந்தது. வெளிநாடுகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, சம்பநதப்பட்டவர்கள் மீது நீதிமன்றங்களில வழக்குத் தொடரும்போது தான் பெயர்களை வெளியிட முடியும் என அறிவித்தது.

கறுப்புப் பணம் பதுக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என உச்ச நீதிமன்றில் பிரபல சட்டத்தரணி ஜெத்மலானி வழக்குத் தொடர்ந்தார்.

இந்நிலையில் ஜெர்மன் வங்கியில் கறுப்புப் பணம் பதுக்கிய 26 இந்தியர்களின் பெயர்களை வெளியிட மத்திய அரசு முடிவு செய்துள்ளது. வெளிநாட்டில் பதுக்கிய பணத்துக்கு வருமான வரி மற்றும் 200 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

# இளைஞர்கள் அரசியலில் ஈடுபட அழைப்பு

(டில்லி)

நாட்டின் அரசியல் களம் ஊழல்வாதிகளால் நிரம்பியிருப்பதாகவும் இதனை ஒழிக்க இளைஞர்கள் மூலம் தான் முடியும் என்றும் இளையதலைமுறையினர் அரசியலில் களம் புக வேண்டும் என்றும் டில்லியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் இளைஞர் காங்கிரஸ் கட்சியின் பொது செயலர் ராகுல் உரையாற்றினார்.

டில்லியில் நாடு தழுவிய காங்கிரஸ் இளைஞர்கள் பங்கேற்கும் மாநாடு நேற்று முன்தினம் ஆரம்பித்து போது அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நமது நாட்டில் அனைவரும் ஊழலைப் பற்றித்தான் பேசி வரு கின்றனர். ஆனால் ஊழல் அரசியல் களத்தில்தான் நிரம்பியிருக்கிறது. பெரும் அளவில் உள்ள இதனை அகற்ற இளைஞர்கள் திரளாக அரசியலில் சேரவேண்டும்.

இளைஞ்களால் தான் ஊழலை ஒழிக்க முடியும். இதற்கு முன்னோடியாக அகில இந்திய காங்கிரஸில் எட்டாயிரம் பேருக்கு முக்கிய பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்கள் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் ஏழை மக்களிடம் சென்று அவர்களின் குறைகளை அறிந்து கொள்வதுடன் அதனை தீர்க்க உழைக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.



## ஊழல் வழக்கில்

# சிறையில் இருந்து வந்தவருக்கு சிறப்பு வரவேற்பும், பதவியும்

(சென்னை)


தி.மு.க., ராஜ்யசபா எம்.பி., கனிமொழி, திகார் சிறையிலிருந்து, பிணையில் வெளியே வரும் போது, அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கவும், முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமியிடமுள்ள தலைமை நிலைய முதன்மைச் செயலர் பதவியை கனிமொழிக்கு பரிசாக வழங்கி, அவரை கட்சியின் பெண் தலைவராக முன்னிலைப்படுத்தவும், தி.மு.க., தலைவர் கருணாநிதி திட்டமிட்டுள்ளார்.

இதற்கு மத்திய அமைச்சர் அழகிரி, பொருளாளர் ஸ்டாலினும் பச்சைக் கொடி காட்டி விட்டதாக, அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் பிணையில் வெளியே வந்த பின், கனிமொழி மாவட்ட வாரியாக சுற்றுப்பயணம் சென்று, தனது விளக்கத்தை தொண்டர்களிடம் தெரிவிக்கவுள்ளார். தஞ்சாவூர், விருதுநகர், திண்டுக்கல் போன்ற மாவட்டங்களில் பிரமாண்ட பொதுக்கூட்டங்களை நடத்தும் திட்டமும் உருவாகியுள்ளது.

மேலும், தி.மு.க.,வில் குறிப்பிடும்படி பெண் தலைவர்கள் இல்லை. அந்தக் குறையைப் போக்கும் வகையில், கனிமொழியை முன்னிலைப்படுத்த அவருக்கு பதவி வழங்கப்பட்டு, அறிவாலயத்தில் அவருக்கென தனி அறை ஒதுக்கப்பட்டு, கட்சிப் பணிகளை மேற்கொள்ள வைக்க கருணாநிதி விரும்புகிறார்.

அதற்கு முக்கிய காரணம், தன்னைப் போலவே கனிமொழியிடம் தமிழ், கலை, கவிதை மீது ஆர்வம் இருக்கிறது என, கருணாநிதி கருதுகிறார். கனிமொழிக்கு பதவி வழங்குவதன் மூலம், மூன்றாம் படை உதயமாகவுள்ளது என அவர் தெரிவித்தார்.



நன்றி: தினமலர்

# பழங்குடியினப் பெண்கள் மீது பாலியல் பலாத்காரம்

## பொலிஸார் 5 பேரும் பணிநீக்கம்

(சென்னை)



விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூரில் 4 பெண்கள் கற்பழிக்கப்பட்ட புகாரின் பேரில் இன்ஸ்பெக்டர், சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் உட்பட 5 பொலிஸார் பணி நீக்கம் செய்யபபட்டுள்ளனர்.

கடந்த 22 ஆம் திகதி அன்று, விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூருக்கு அருகில் உள்ள மண்டபம் கிராமத்தில், இருளர் சமூகத்தைச் சேர்ந்த லட்சுமி, கார்த்திகா, ராதிகா மாதேஸ்வரி ஆகிய நான்கு பெண்களை, பொலிஸார் விசாரணைக்கு என்று கூறி, வலுக்கட்டாயமாக இழுத்துச்சென்று பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர்.

சம்பவத்தின் போது வள்ளி என்கின்ற அம்மையார் பொலிஸாரிடம் அந்தப் பெண்களை விட்டுவிடுமாறு கோரி மன்றாடியபோதும், அவர் கண் முன்னாலேயே அவரது மகளையும், மருமகளையும் பொலிஸார் பாலியல் வன்முறை செய்து உள்ளனர். மேலும் அதில் லட்சுமி என்ற பெண், மூன்று மாதக் கர்ப்பிணி ஆவார்.

மேற்படி விடயம் தொடர்பாக திருக்கோவிலூர் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் சீனிவாசன், சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் ராமநாதன், கொன்ஸ்டபிள் தனசேகர், பொலிஸ்காரர்கள் கார்த்திகேயன், பக்தவத்சலம் ஆகிய 5 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கையை நேற்று முன்தினம் ஐ.ஜி. சைலேந்திரபாபு எடுத்துள்ளார்.

# பஸ் விபத்தில் 15 பேர் பலி

(நாக்பூர்)

மகாராஷ்டிராவில் 2 பஸ்கள் நேருக்கு நேர் மோதி தீப்பிடிதது கொண்டதில், 15 பேர் உடல் கருகிப் பலியாகினர். 57 பேர் படுகாயமடைந்தனர்.

மகாராஷ்டிரா மாநிலம், நாக்பூர்- அவுரங்கபாத் நெடுஞ்சாலையில் நேற்றுமுன்தினம் அதிகாலையில் 2 பஸ்கள் நேருக்கு நேராக மோதிக் கொண்டன.

இந்த விபத்தில் 2 பஸ்களும் ஒன்றையொன்று மோதிக் கொண்டதால் பயணிகள் பஸ்களை விட்டு வெளியேற முடியாமல் தவித்தனர்.

சிறிது நேரத்தில் பஸ்கள் தீப்பிடித்து எரிய ஆரம்பித்தன. இதனால் பஸ்ஸில் சிக்கிய பயணிகள் பலர் தீக்காயம் அடைந்தனர்.

இந்த விபத்தில் 15 பேர் உடல கருகிப் பலியாகினர். மேலும் 57 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் 37 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

# கடலோர காவல் படை தாக்கல் செய்த மனுவை திரும்பப்பெற வலியுறுத்தி மீனவர் போராட்டம்

(மண்டபம்)

இலங்கையில் உள்நாட்டு போர் முடிவுக்கு வந்தபின், தமிழக மீனவர்களை அந்நாட்டு கடற்படை தாக்குவது தொடர்கதை யாகியுள்ளது. இதுவரை நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இலங்கை கடற்படையின் அத்து மீறல்கள் குறித்து உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம் தமிழக மீனவர்களுக்கு இந்திய கடற்படை, கடலோர காவல் படை பாதுகாப்பு வழங்க வேண்டும் என உத்தரவிட்டது.

இதை எதிர்த்து இந்திய கடலோர காவல் படை தாக்கல் செய்த பதில் மனுவில், தமிழக மன வர்கள் சர்வதேச எல்லையை தாண்டி இலங்கை கடற்பகுதிக்குள் சென்று மீன் பிடிக்கின்றனர். இலங்கை கடற்பகுதிக்குள் தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடிக்கின்றனர் எனக் குறிப்பிட்டது. இதை ஏற்காத உயர்நீதிமன்றம், தனது தீர்ப்பை உறுதிப்படுத்தியது.

மேலும், கடலோர காவற்படை சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், நாட்டின் பாதுகாப்புக் கருதி, குஜராத் - பாகிஸ்தான் எல்லையில் மீன்பிடி இல்லா மண்டலம் உருவாக்கப்பட்டு இருபபதை போல், தமிழக - இலங்கை கடற்பகுதியை மீன்பிடி இல்லா மண்டலமாக அறிவிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. இதற்கு தமிழக மீனவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கடலோர காவல் படை தாக் கல் செய்துள்ள இம்மனுவை திரும்பப் பெற வலியுறுத்தி, ராமேஸ்வரம் துறைமுகப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் நீதிமன்றத் தில் கடலோர காவற்படை சார்பில தாக்கல் செய்யப்பட்ட மனுவை, உடனடியாக திரும்பப் பெற வேண்டும். இல்லை என்றால், தமிழகம் முழுவதும் மீனவர்களை ஒருங்கிணைத்து, பல்வேறு தொடர் போராட்டங்கள் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# ஈராக்கில் தற்கொலைத்தாக்குதல் 19 பேர் பலி; 24பேர் காயம்

(பாக்தாத்)

ஈராக்கில் இராணுவ முகாம் மீது நடந்த தற்கொலைப்படை தாக்குதலில் 19 பேர் பலியாகியுள்ளதுடன் 24பேர் காயமடைந்தனர். ஈராக் தலைநகர் பாக்தாத் நகரிலிருந்து வடக்கே 20 கி.மீ. தொலைவில் தாஜி நகரில் இராணுவ முகாம் உள்ளது. இங்குள்ள சிறையில் போர் கைதிகள், அல்கொய்தா பயங்கரவாதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். சம்பவத்தன்று ஒரு மினிபஸ் ஒன்றில் பயங்கர வெடிபொருட்களுடன் வந்த பயங்கரவாதி ஒருவன் தற்கொலை தாக்குதல் நடத்தினான். இதில் 19 பேர் சம்பவ இடத்திலேயே பலியாயினர். பலியானவர்களில் 11 பேர் சிறை காவலர்கள் எனவும் 4 பேர் சிறைக்கைதிகளை பார்க்க வந்த பொதுமக்கள் எனவும் பாதுகாப்புப்படையினர் கூறினர்.



பங்களாதேஷ் சுற்றுப்பணம் மேற்கொண்டுள்ள ஜேர்மன் ஜனாதிபதி கிறிஷயன் வுல்.'.ப்பை(இடது), தலைநகர் தாகாவில் உள்ள சஹாஜ்லால் சர்வதேச விமான நிலையத்தில் அந்நாட்டு ஜனாதிபதி ஜிலூர் ரஹ்மான் வரவேற்பதைக் காணலாம்.

## நேட்டோ தாக்குதல் விவகாரம் விசாரணை நடத்த உத்தரவு

(வோஷிங்டன்)

ஆப்கான்-பாகிஸ்தான் எல்லையில் அமெரிக்காவின் நேட்டோ படைகள் நடத்திய வான் தாக்குதல்கள் உலக அளவில் கண்டனத்திற்குள்ளாகியுள்ளன. இது தொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்படும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கடந்த 26ஆம் திகதி அதிகாலை, பாகிஸ்தானின் மொஹ்மந்த் பழங்குடியினப் பகுதியில், ஆப்கானிஸ்தான் எல்லையில் இருந்து மூன்று கி.மீ., தொலைவில் உள்ள சலாலா எல்லைச் சாவடி மீது, நேட்டோ-ஆப்கன் படைகள் இணைந்து நடத்திய தாக்குதலில், 24 பாகிஸ்தான் வீரர்கள் பலியாயினர்.இச்சம்பவம், ஏற்கனவே சிக்கலில் உள்ள அமெரிக்கா பாகிஸ்தான் உறவில் மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் செய்தி தொடர்பாளர் ஜியார்ஜ் லிட்டில் கூறுகையில், நேட்டோ படை தாக்குதல் குறித்து விரிவான விசாரணை நடத்தப்படும்.

தற்போதுள்ள சிக்கலான நிலையில் பாகிஸ்தான்,அமெரிக்க உறவுகள் குறித்து நான் கருத்து சொல்ல விரும்பவில்லை. அமெரிக்காவின் மத்திய கமாண்டோ படை தலைவர் தலைமையிலான குழு விரிவான விசாரணை நடத்தும் என்றார். இதற் கிடையே இந்த விவகாரம் குறித்து அமெரிக்காவின் இராணுவஅமைச்சர் லியோன் பெனட்டா கூறுகையில் , திடீரென வான்தாக்குதல் குறித்து பாகிஸ்தான் அரசிடம் ஆலோசித்தும், அந்நாட்டு இராணுவ உயரதிகாரிகளிடம் தொடர்ந்து தொடர்பில் உள்ளதாக கூறினார்.

## ஜேர்மனியில் நகரும் தேவாலயம்



ஜேர்மனியில் உள்ள Heuersdorf என்ற இடத்தில் 13ஆம் நுற்றாண்டில் Emmous தேவாலயம் ஒன்று இருந்தது. இந்த தேவாலயம் அமைந்துள்ள இடத்தில் பழுப்பு நிலக்கரி காணப்பட்டதால் தேவாலயத்தின் இருப்பிடத்தை மாற்றுமாறு கூறினர்.

தேவாலயத்தை அங்கிருந்து மாற்றி, நகரும் தேவாலயமாக மாற்றி மின்சாரம், தொலைபேசி, வாகனப் போக்குவரத்து இவைகளுக்கு 3 மில்லியன் யூரோ செலவாகியுள்ளது. இந்த தேவாலயம் 12கிலோ மீற்றர்(7.5 மைல்) நகர்வதற்கு 6 நாட்கள் தேவையானது என தெரிவிக்கப்படுகிறது.

## உலகச் செய்திகள்

## செவ்வாய்க்கிரகத்தில் மணல் குன்றுகள்

### விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் நாசா விண்வெளி விஞ்ஞானிகள் செவ்வாய்க் கிரகத்துக்கு விண்வெளி ஓடத்தை அனுப்பி ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். அது எடுத்து அனுப்பியுள்ள புகைப்படங்களில் செவ்வாய்க் கிரகத்தில் மணல் குன்றுகள் மற்றும் அடுக்கடுக்கான மணல் அலைகள் இருப்பது தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து, அமெரிக்காவின் ஜோன்ஸ் காப்கின்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞானி நாதன் பிரிட்ஜஸ் கூறும் போது, செவ்வாய்க் கிரகத்தில் மிக பலத்த புயற காற்று வீசுகிறது. அதனால் அங்கு பறக்கும் மணல்கள் குன்றுகளாக உருவாகியுள்ளன. மேலும் மணல் அலைகளாக மாறி அடுக்கடுக்காக தெரிகின்றன என்று தெரிவித்துள்ளார்.



கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பே இங்கு மணல் குன்றுகள் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். ஆனால், அவை தானாக உருவானது என கூறி வந்தனர். தற்போதுதான் அவை புயல் காற்றினால் ஏற்பட்டவை என கண்டுபிடித்துள்ளனர் என்றும் கூறியுள்ளார்.

## பிரதமர் மீது ஊழல் குற்றச்சாட்டு குவைத் நாடாளுமன்றம் கலைப்பு

குவைத் நாட்டில் பிரதமர் மீது எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊழல் குற்றச்சாட்டு கூறியதை தொடர்ந்து நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

வளைகுடா நாடான குவைத் நாட்டின் பிரதமராக ஷேக்-நஸீர் முகமது அல்-அகமது ஷபா(71) உள்ளார். இவர் கடந்த 2006ஆம் ஆண்டு முதல் பிரதமர் பதவி வகித்து வருகிறார்.

இந்நிலையில் பிரதமர் ஊழல் மூலம் அரசுப்பணத்தை வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கியுள்ளதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் புகார் தெரிவித்து நேற்றுமுன்தினம் மாபெரும் பேரணி நடத்தினர்.

இதைத்தொடர்ந்து ஏற்பட்டுள்ள அரசியல் சிக்கலை சமாளிக்க மன்னர் ஷேக்-ஷபா அல்-அகமது அல்-ஷபா உயரதிகாரிகளின் அவசரக்கூட்டதை கூட்டினார். பின்னர் பிரதமர் பதவியிலிருந்து நஸீர் முகமது உடனடியாக விலகுமாறும், பின்னர அமைச்சரவை இராஜினாமா செய்யுமாறும் நாடாளுமன்றத்தை கலைக்குமாறும் உத்தரவிட்டார்.

எனினும் பொதுத்தேர்தல் நடக்கும் வரை நாடாளுமன்றம் செயற்படும் என தெரிவிக்கப்படுகிறது.



## அணுசக்தி திட்டங்கள் பாதுகாப்பாக இல்லை

### பாகிஸ்தான் முன்னாள் வெளியுறவு அமைச்சர்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் ஆட்சியில் நாட்டின் அணு ஆயுதங்கள் பாதுகாப்பாக இல்லை என்று பாகிஸ்தானின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷி தெரிவித்தார்.

இதனிடையே குரேஷியின் குற்றச்சாட்டு பாகிஸ்தான் அரசை கோபமூட்டியுள்ளது. இது அடிப்படையற்ற குற்றச்சாட்டு என்று மறுத்துள்ள அரசு, அணுத் திட்டங்களில் எந்த சமரசத்துக்கும் இடமில்லை என்று கூறியுள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி ஜர்தாரியின் தலைமையில் நாட்டின் அணுசக்தி திட்டங்கள் பாதுகாப்பாக இல்லை. வெளியுறவு அமைச்சராக இருந்ததால் அணுசக்தி திட்டங்களை நான் நன்றாகவே அறிந்துள்ளேன். அணு திட்டங்கள் காரணமாக பாகிஸ்தான் சந்தித்து வரும் அழுத்தங்களையும், நெருக்குதலையும் நான் அறிவேன்" என்று முன்னாள் வெளியுறவு அமைச்சர் குரேஷி, சிந்து மாகாணத்தின் கோட்கி பகுதியில் நடந்த பொதுக்கூட்டத்தில் தெரிவித்தார். இந்த விவகாரம் குறித்து விரைவில் விரிவாக பேசுவேன் என்றும் குரேஷி தெரிவித்தார்.

பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் தலிபான் பயங்கரவாத இயககத்தின் கைகளில் சிக்குவதற்கு வாய்ப்புள்ளது என்று சர்வதேச நிபுணர்கள் எச்சரித்துள்ள நிலையில் குரேஷியின் தகவல் வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## வித்தியாசமான கிறிஸ்மஸ் அலங்காரம்

(லண்டன்)



கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு இங்கிலாந்தில் உள்ள அருங்காட்சியகத்தின் தோட்டம் முழுவதும் 5 ஆயிரம் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்மஸ் பண்டிகைக்கு இன்னும் ஒரு மாதமே இருக்கிறது. இங்கிலாந்தின் பாத் நகரில் உள்ள ஹால்பர்ன் அருங்காட்சியகம் இதை வித்தியாசமாக கொண்டாட முடிவு செய்தது. அருங்காட்சியகத்தின் முன் பகுதியில் உள்ள தோட்டத்தை மின்விளக்குகள் அமைத்து அலங்காரிக்கும் பொறுப்பை ப்ரூஸ் முன்ரோ என்ற கலைஞரிடம் ஒப்படைத்தது.

இதற்காக கோரைப் புற்கள் போல மெலிதாக அக்ரிலிக் தண்டுகள் மற்றும் அதன் மேல் பகுதியில் பொருத்த கணணாடி பலூன்களை உருவாக்கினார் ப்ரூஸ். ஒப்டிக்கல் பைபர் இழைகளும் அதில் பொருத்தப்பட்டன. இவ்வாறு வடிவமைக்கப்பட்ட 5 ஆயிரம் விளக்குகளை தோட்டம் முழுவதும் நடப்பட்டது. பிரத்யேகமாக அமைக்கப்பட்ட ஒளிபாச்சும் கருவி மூலம் வெளியேறும் பல வண்ண ஒளியை 5 ஆயிரம் விளக்குகளும் பிரதிபலிப்பதால் அருங்காட்சியக தோட்டம் ஜொலிக்கிறது. ஏராளமான மக்கள் இதை கண்டு ரசித்து வருகின்றனர்.

## காலநிலை மாற்ற மாநாடு


COP17/CMP7
UNITED NATIONS
CLIMATE CHANGE CONFERENCE 2011
DURBAN, SOUTH AFRICA

காலநிலை மாற்றம் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் வருடாந்த மாநாடு தென்னாபிரிக்காவில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் நடைபெறும் இந்த மாநாட்டில் 82 நாடுகளை சேர்ந்த 15000 பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர். இம்முறை மாநாட்டில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி சுற்றாடல் அமைச்சின் செயளாளர் உள்ளிட்ட குழுவொன்று கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புவி வெப்பமடைவதனால் மாற்றமடையும் காலநிலை தொடர்பில் இந்த மாநாட்டில் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசியற் தீர்வையும் அபிவிருத்தியையும் நிறைவேற்றினால் இதுதான் இலங்கையின் பொற்காலமாக எழுதப்படும்



*யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) வரவு செலவுத்திட்ட விவாதத்திற் கலந்து கொண்டு நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை.*

**கௌரவ சபாநாயகர் அவர்களே!**

யுத்தம் முடிந்த பின்னர் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மூன்றாவது வரவு செலவுத்திட்டம் இதுவாகும்.

யுத்தத்திற்குப் பின்னர் எமது மக்கள் கௌரவமான, அமைதியான, முன்னேற்றமான ஒரு நல்வாழ்வு கிடைக்கும் என்றே எதிர்பார்த்துள்ளனர்.

அதேவேளை, நீண்டகால யுத்தத்தினாற் களைப்படைந்த மக்களுக்கு அமைதியான, புதிய சூழல் மகிழ்ச்சியைத் தந்திருப்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

யுத்தமற்ற ஒரு சூழலை உருவாக்கித் தந்ததற்காக நான், ஜனாதிபதி அவர்களுக்கும் அதற்காகப் பாடுபட்ட அனைத்துத் தரப்பினருக்கும் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், மக்களின் வாழ்க்கை பொருளாதார ரீதியிலும் ஏனைய பல விடயங்களிலும் முன்னேற்றமடைய வேண்டியுள்ளது. மக்கள் அதனையே எதிர்பார்த்திருக்கிறார்கள்.

'மகிந்த சிந்தனை' அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திக் கொள்கையை நாம் வரவேற்கிறோம். சுயபொருளாதார நிலைமைகளைக் கவனத்திற் கொள்ளும் இந்தத் திட்டம் குறிப்பிடத்தக்க வெற்றிகளை எட்டி வருகிறது.

ஆனால், நாட்டின் எதிர்பார்ப்புகள் இன்னும் பல படிகளில் முன்னேற்றமடையவுள்ளது. வடக்குக் கிழக்குப் பகுதிகளைப் பொறுத்தவரை அங்கே மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள் அதிகமாக உள்ளன.

வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் என்ற சிறப்புத் திட்டங்கள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. ஆனாலும், அங்கே மக்களை மீள்நிலைக்குக் கொண்டு வருவதற்கு மேலும் உதவிகளும் அபிவிருத்தி நடவடிக்கைகளும் அவசியம்.

நாட்டின் பொதுமைப்படுத்தப்பட்ட திட்டங்கள் வடகக்குக் கிழக்குப் பகுதிகளுக்குப் பற்றாக்குறைகளையே ஏற்படுத்தியுள்ளன. அங்கு மேலும் விசேடமான, விரைவுபடுத்தப்பட்ட திட்டங்கள் அவசியமாகவுள்ளன.

மீள் குடியேறிய மக்களின் பிரதேசங்களின் கட்டுமானங்கள் தொடக்கம் அவர்களுக்கான அவசியத் தேவைகள் வரையில் இது மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது.

யுத்தத்துக்குப் பின்னர், இவ்வளவு விரைவில் மீள் குடியேற்றம் சாத்தியப்பட்டமைக்கு நாம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆனால், மீளக்குடியேறிய மக்களுடைய வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதில், மேலும் தாமதங்களே ஏற்பட்டுள்ளன. இந்த நிலைமையைச் சீர் செய்வதற்கு ஏற்பாடுகள் அவசியமாக உள்ளன.

நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்கு வடபகுதி மக்கள் தயாராக இருக்கின்றனர். ஆனால், அவரகளுடைய பங்களிப்புக்கான அடிப்படைகளை உருவாக்க வேண்டிய தேவை இருக்கிறது.

போரினால் சிதைந்து போயிருக்கும் சமூகத்தையும் உட்கட்டுமானங்களையும் பொருளாதார அடிப்படைகளையும் மீளுருவாக்கம் செய்யும்போதே இந்த மக்களை முழுமையான அபிவிருத்திக்காக ஊக்கப்படுத்த முடியும்.

வடக்கிலே போரின் காரணமாகச் செயலிழந்து போன தொழிற்சாலைகள் மீளமைக்கப்படவில்லை. அவற்றுக்கான ஏற்பாடுகளும் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. இந்தத் தொழிற்சாலைகளை மீளமைப்பதன் மூலமாக ஆயிரக்கணக்கானவர்களுக்கான வேலை வாய்ப்பை வழங்க முடியும்.

இதைப்போல இந்தப் பிரதேசங்களுக்குப் பொருத்தமான தொழில் மையங்களை இனங்கண்டு அங்கே அமைக்க வேண்டியுள்ளது. இதன்மூலம் சமச்சீரான பொருளாதார நிலையைச் சாதகமாக்கலாம். தகர்ந்து போயிருக்கும் பிரதேசப் பொருளாதாரத்தையும் குடும்பப் பொருளாதாரத்தையும் நிவர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும். இது நாட்டின் பொருளாதார அபிவிருத்தியையும் மேம்படுத்தும்.

மீன்பிடி, விவசாயம் போன்றவற்றை விருத்தி செய்வதறகான ஏற்பாடுகளும் அங்கே விசேடமாக முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கிளிநொச்சியில் விதை நெல் உற்பத்தி மற்றும் நெற்களஞ்சியம் போன்றவை ஆரம்பிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

ஆனால், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் விவசாய மேம்பாட்டுக்காக சிறப்புத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். நீண்டகாலமாகவே பல்வேறு தடைகளாலும் நெருக்கடிகளாலும் பாதிக்கப்பட்டவர்கள் வடபகுதி விவசாயிகள். தற்போது உருவாகியிருக்கும் சூழலில் மீண்டும் நம்பிக்கையுடன் பயிர்ச்செய்கையில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

ஆனால், இவர்களுக்கான உதவித்திட்டங்களும் ஆதரவுத் திட்டங்களும் அவசியமாகவுள்ளன.

குறிப்பாக மீள்குடியேறி வரும் பகுதிகளில் உள்ள விவசாயிகள் மீண்டும் விவசாயச் செய்கையில் ஈடுபடுவதற்கு நிலத்தைப் பண்படுத்தவே பெரும் செலவு ஏற்படுகிறது.

ஆகவே விவசாயப் பொருளாதாரத்தைப் பிரதானமாகக் கொண்ட வடக்கு விவசாயிகளுக்கு அரசாங்கம் விசேட உதவித்திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும். குறைந்த பட்சம் இவர்களுக்கு வட்டியில்லாத கடனையாவது வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

வட பகுதியில் இன்னொரு முக்கியமான பொருளாதார நடவடிக்கை மீன்பிடியாகும். இப்போது அங்கே மீன்பிடிப்பதற்கான சூழல் முன்னரை விடவும் மேம்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் நெருக்கடிகள் ஏற்பட்டாலும் எமது மீனவர்கள் மீண்டும் நம்பிக்கையோடு தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு இரண்டு பிரதான பிரச்சினைகள் இருககின்றன. இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள், மீன்பிடித துறைமுக வசதியின்மை போன்றவை இதில் முக்கியமானவை. சில மீன்பிடித் துறைமுகங்களை கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் உரிய வசதிகள் கிடைக்கும் பட்சத்திலேயே அந்தத் தொழிற்துறையை மேம்படுத்த முடியும்.

ஆகவே, குறிப்பிட்ட துறைகளுக்கான நிதி ஒதுக்கீட்டையும் அவற்றுக்கான திட்டங்களையும் அரசாங்கம் தன்னுடைய பொருளாதாரத் திட்டங்களில் உட்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மீள்குடியேற வேண்டிய நிலையில் உள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்னமும் வெளிச் சூழலில்தான் வாழ்கின்றனர். இவர்கள் ஒரு நிலையான பொருளாதாரத் திட்டத்தைக் கொண்டிருக்கவில்லை. இதனால், நிவாரண உதவிகளையும் சமுர்த்தித்திட்ட உதவிகளையும் பெற வேண்டிய நிலையிலேயே இருக்கின்றனர். இப் பிரதேச மக்களின் வாழ்நிலை உயர்த்தப்பட வேண்டும்.

பாதிப்புக்குள்ளாகிய ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்வாதார உதவிகளை எதிர்பார்த்திருக்கின்றனர்.

இவர்களை மீள்நிலைப்படுத்திச் சமூகத்திற் சமநிலை கொள்ள வைப்பதற்கான ஏற்பாடுகளையும், சமூக நலன் மற்றும் சமூக உதவித்திட்டங்களின் மூலமாக இவர்களுடைய சுய பொருளாதார அடிப்படைகளையும் உருவாக்க வேண்டியுள்ளது.

இதேவேளை பொதுவாகவே வடக்கிலே கவனஞ் செலுத்தப்பட வேண்டிய திட்டங்கள் சில உள்ளன.

முக்கியமாக வீடமைப்பு, சுகாதார வசதிகள், போக்குவரத்து, குடிநீர், வீதி போன்றவை. இந்தத் திட்டங்களுககான உதவிகளும் ஒதுக்கீடுகளும் நாட்டின் ஏனைய பகுதிகளை விடவும் அதிகமாக வடக்குக் கிழக்கிற்குத் தேவை.

ஏனென்றால், வடக்குக் கிழக்குப் பகுதிகள்தான் இவற்றில் அதிக பின்தங்கிய நிலையிலும் அதிகமான பாதிப்புக்குள்ளாகிய நிலையிலும் உள்ளன. அடிப்படைக் கட்டமைப்புகளும் அடிப்படைப் பொருளாதாரமும் தகர்ந்து போன நிலை இந்தப் பகுதிகளுக்கும் இந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்குமே உண்டு.

அண்மையில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் வெளிபபடுத்திய தகவல்கள் இங்கே முக்கியமாகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்திலே வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற மக்களின் பொருளாதார நிலை மிக மோசமாக உள்ளது என்றும் அவர்களுடைய அடிப்படைத் தேவைகளான உணவு, உடை போன்றவற்றுக்கே அவர்கள் சிரமப்படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

அதைப் போலவே தொழில் வாய்ப்பில்லாத நிலையில் ஆயிரக்கணக்கான இளைஞர்களும், இளம் பெண்களும் இருக்கின்றனர். இந்த நிலை நீடிக்குமானால், சமூகச் சீரழிவுகளும் பாதுகாப்பும் அற்ற ஒரு நிலை உருவாகும்.

அதேவேளை, இளைய தலைமுறையின் ஆற்றலையும் அறிவையும் அவர்களுடைய சக்தியையும் இந்த நாடு இழந்தும் விடும்.

ஆகவே இவற்றைச் சீர்ப்படுத்திக் கொள்வதற்கு விசேட திட்டங்களையும் சிறப்பு ஒதுக்கீடுகளையும் மேற்கொள்ள வேண்டும்.

வடக்கில் வீடமைப்புத் திட்டங்களை மக்கள் கூடிய அளவில் எதிர்பார்த்திருக்கின்றனர். இவர்கள் காலங் கடந்த தற்காலிக வீடுகளில் மிகுந்த சிரமங்களின் மத்தியில் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

இந்த அரசாங்கமானது, துன்பங்களை நீக்கி, துயரங்களைப் போக்கி, நல்லதொரு பொற்காலத்தை உருவாககும் அரசாங்கம் என்ற மனப்பதிவை நாம் மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

இன்று மக்கள் இயல்பு நிலையை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். இழந்து போன கடந்த காலத்தின் வாழ்வையும் இழந்த வாய்ப்புகளையும் மீண்டும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற துடிப்புடன் இவர்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே!**

சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவுத்திட்டத்தில் தமக்கான நன்மைகள் என்ன என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அரசாங்கத்தின் திட்டங்களிலும் அதனுடைய செயற்பாடுகளிலும் தங்களுடைய எதிர்பார்ப்புகளை வைத்திருப்பது மக்களுடைய இயல்பாகும்.

அந்த அடிப்படையில், மக்களை ஆறுதற்படுத்தக் கூடியவாறு, அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கக் கூடியவாறு, அவர்களை மகிழ்ச்சிப் படுத்தக் கூடியவாறு இந்த வரவு செலவுத்திட்டத்தின் ஒதுக்கீடுகள் அமைய வேண்டும்.

இப்போது யாழ்ப்பாணத்திலுள்ள பொது மருத்துவமனை நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்டு வருகிறது. இதை மக்கள் வரவேற்றுள்ளனர். இதைப்போல யாழ்ப்பாணத்துக்கான குடிநீர் விநியோகத் திட்டத்தையும் பாரிய திட்டமாக மேற்கொள்வதற்கு அரசாங்கம் முன்வந்திருப்பதையும் பாராட்டுகின்றேன்.

ஆனால், நிலத்தடி நீர்ச் சேமிப்புக்கான அடிப்படைகளை யாழ்ப்பாணத்தின் தீவகம், வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்வதற்கு முயற்சி எடுக்க வேண்டும். நிலத்தடி நீர்ச் சேகரிப்பானது, குடிநீருக்கு மட்டுமல்ல, பயிர்ச்செய்கைக்கும் அவசியமானது.

இத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் இவை முழுமையாக நடைபெறவில்லை. அத்துடன் மந்த கதியிலேயே நடைபெற்றும் வருகின்றன. இவற்றுக்கும் உரிய ஒதுக்கீட்டைச் செய்ய முன்வர வேண்டும்.

வடபகுதியின் அபிவிருத்திப் பணிகளிலும் மீள் நிர்மாணப் பணிகளிலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சே அதிக பங்களிப்பைச் செய்து வருகின்றது.

இந்த அமைச்சை திறம்பட நிர்வகித்து வரும் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்கள் அடிக்கடி வட பகுதிக்கு வந்து நிலைமைகளை நேரிலே அவதானித்துச் செல்கின்றார். இதன்மூலம் அங்கேயுள்ள நிலைமைகளை அவர் நேரடியாகவே அறிந்தும் தெரிந்தும் கொள்ளக்கூடிய ஒரு நிலையில் உள்ளார்.

எமது மக்கள் அரசியற் தீர்வுககாகவும் அபிவிருத்திக்காகவும் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து எதிர்பார்த்திருக்கின்றனர். இந்த இரண்டையும் இந்த அரசாங்கம் நிறைவேற்றுமானால், அது இலங்கையின் வரலாற்றில் ஒரு பொற்காலம் என்றே வரலாறு சான்று பகரும்.

இன்று உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் சில சக்திகள் இலங்கைக்கு நெருக்கடிகளை அதிகமாக்கவே விரும்புகின்றனர்.

இதனை நாம் அனைவரும் ஒன்றிணைந்து முறியடிப்போம். இதற்கு நாம் ஒருங்கிணைந்த பொருளாதார, சமூக, அரசியற் செயற்பாட்டினில் செயற்படவேணும். அதற்கான அடிப்படைகளை நோக்கியே என்னுடைய எண்ணங்களை இங்கே வெளிப்படுத்தியிருக்கிறேன்.

மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில்தான் நல்லதொரு ஆட்சியின் மகிமை தங்கியிருக்கிறது என்றே வலியுறுத்தி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

# அபிவிருத்தியை நோக்கி யாழ். நகரம் மக்கள் பங்கேற்க பிரஜைகள் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் நடவடிக்கைகளுக்கு மக்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளும் வகையில் யாழ். நகரப்பகுதியில் பிரஜைகள் ஒன்றியங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாநகர சபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் இவ்வாறான பிரஜைகள் ஒன்றியம் அமைக்கப்பட்டு வருகிறது.



யாழ். நகரப்பகுதியின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது இந்த பிரஜைகள் ஒன்றியம் தனது பங்களிப்பினை வழங்கும்.

பிரதேச அபிவிருத்தி தொடர்பாக அதிகாரிகள் முடிவெடுப்பதற்குப் பதிலாக மக்களே தமது அபிவிருத்தி குறித்து முடிவுகளை எடுக்கும் நோக்கம் கொண்டதாகவே இந்த பிரஜைகள் ஒன்றியம் அமைக்கப்படுகின்றது என யாழ். மாநகர சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கிய 47 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்குகின்றன.

இக்கிராமங்களில் எதிர்காலத்தில் மேற்கொள்ள திட்டமிடப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக மக்களின் கருத்துக்களை அறியும் நோக்குடன் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக மாநகர முதல்வர் தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் பிரதேச அபிவிருத்தி தொடர்பாக மக்கள் கருத்துக்களை கேட்டறிந்து ஆவணப்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறு முன்னுரிமைப்படுத்தப்படும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பான முன்மொழிவுகள் அரச, அரசார்பற்ற நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு அடுத்த ஆண்டு முதல் பிரதேச அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ். மாநகர சபையினால் வீதி அபிவிருத்தி, நகர தூய்மை, கல்வி நடவடிக்கை (சனசமூக நிலையங்கள் மூலம்), சமூக சேவை, திண்மக் கழிவு முகாமைத்துவம், நீர் விநியோகம், மின்சாரம், ஏனைய பொதுவசதிகள், நகரப்புறப் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக மக்கள் கருத்துக்கள் அறியப்பட்டு வருகின்றது.

இதேவேளை, கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நடைபெற்று வரும் திட்டமிடல் கூட்டங்களின் 17 ஆவது கூட்டம் நேற்று மாலை கந்தர்மடம் வடமேற்கு கிராம அலுவலர் பிரிவில் நடைபெற்ற போது அங்கு சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட முதல்வரின் செயலாளர் பற்குணராசா கூட்டத்தின் நோக்கம் குறித்து அங்கு திரண்டிருந்த கிராம மக்களுக்கு தெளிவுபடுத்தினார்.

இதன்போது 10 பேர் கொண்ட பிரஜைகள் ஒன்றியம் தெரிவு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் மாநகர சபை அதிகாரிகள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (26)

## காணாமற் போன....

வந்திருப்பதாக அவரது சகோதரர் யாழ். மனித உரிமைகள் காரியாலயத்திற்கு தெரிவித்திருப்பதாக அதிகாரி குறிப்பிட்டார்.

அத்துடன் குறித்த மாணவன் சாவகச்சேரி பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்குவதற்காக நிற்பதாகவும் இதன் காரணமாக யாழ். மனித உரிமைகள் காரியாலயத்திற்கு அவரை அழைத்துவர முடியாமல் இருப்பதாகவும் அம்மாணவனின் சகோதரன் தெரிவித்திருப்பதாக நேற்றுமாலை அவ் அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை மாணவன் காணாமற்போனமை குறித்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிகால் ஹப்பு ஆராய்ச்சி தெரிவிக்கையில்,

இராணுவத்தினர் எவரையும் கடத்துவதில்லை எனவும், இக்கடத்தல் நாடகம் தொடர்பான உண்மைகளை அறியும் பொருட்டு பொலிஸார் குறிப்பிட்ட இளைஞனிடம் விசாரணைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்த அவர், விசாரணை முடிவில் மேற்படி கடத்தல் நாடகத்தின் உண்மைகள் வெளிவரும் எனவும் தெரிவித்தார்.

## தற்போதைய அரசியல்...

அக்கறையின்றி செயற்படுகிறன்றமை, வடக்கு, கிழக்கு சிங்கள மயமாக்கப்படுதல், இராணுவ மயமாக்கப்படுதல் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துக்களை செவிமடுத்த யசூசி அகாஷி, இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில் அரசியல் தீர்வு ஒன்றை முன்வைப்பதற்கு அரசாங்கத்திற்கு சரியான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகத் தெரிவித்ததாகவும், இவ்வாய்ப்பை அரசாங்கம் தவறவிடக் கூடாது என்ற நிலைப்பாட்டில் தாம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரசியல் தீர்வு விடயத்தில் விரைந்து செயற்பட வேண்டியமை குறித்து தான் சந்திக்கவுள்ள அமைச்சர்கள் உள்ளிட்ட உயர்மட்டப் பிரதிநிதிகளுக்கு வலியுறுத்தவுள்ளதாகவும் யசூசி அகாஷி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உறுதியளித்துள்ளார்.

அதேவேளை, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சுமுகமான அரசியல் தீர்வு ஒன்று முன்வைக்கப்பட வேண்டும் என்ற விடயத்தில் தாம் தெளிவாக இருப்பதாகவும் யசூசி அகாஷி கூறியுள்ளார்.

இச்சந்திப்பு மிகவும் திருப்திகரமானதாக அமைந்ததென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா, ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சுமந்திரன், பொன்.செல்வராசா, அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஆணைக்குழு...

அறிவித்துள்ளது.

இதேவேளை, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் சர்வதேச சமூகத்திற்கு அறிக்கை தொடர்பில் விளக்கமளிக்கப்படும் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

## கழுத்துப்...

அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, ஜி.எல்.பீரிஸ், தினேஸ் குணவர்த்தன ஆகியோர் குறித்த அறிக்கையை வாசிக்க எதிர்ப்புத் தெரிவித்தனர்.

நீதிமன்றத்தில் உள்ள விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் பேச அனுமதிக்கக் கூடாது என்று அவர்கள் எதிர்ப்பு வெளியிட்டனர். இதனால் ரணில் விக்கிரமசிங்க பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இதையடுத்து கொமன்வெல்த் நாடாளுமன்ற ஒன்றியத்தின் இலச்சினை பொறிக்கப்பட்ட கழுத்துப்பட்டியை கழற்றி எதிர்ப்புத் தெரிவித்தவாறு வெளிநடப்புச் செய்தார் ரணில்.

## நோர்வேயின்...

காத்திருக்கிறது.

அமைதி முயற்சிகள் தொடர்பாக நோர்வே வெளியிட்ட மீளாய்வு அறிக்கையை முற்றிலுமாக வாசிக்கவில்லை. ஆனாலும் அறிக்கையின் முக்கிய பகுதிகளை வாசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இந்த அறிக்கையின் கண்டறிவுகள் தொடர்பாக கருத்து வெளியிட முடியாது.


ஆனால் இதில் கூறப்பட்டுள்ள சில விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியும். சிலவற்றை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழர்....

அந்நாட்டு சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முடியும். இனப்பிரச்சினையால் தமிழ் மக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுக்கப்பட வேண்டியது அவசியமானது.

சிறுபான்மை மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தல் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் மட்டுமன்றி யுத்த வலயத்தில் இயல்பு நிலைமையை ஏற்படுத்தவும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# இந்தியா வெற்றி



இந்திய - மேற்கிந்திய அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி ஒரு விக்கெட்டால் வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி களத்தடுப்பை தேர்ந்தெடுக்க மேற்கிந்திய அணி துடுப்பெடுத்தாடியது. அவ்வணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டை இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் ஆடிய இந்திய அணி 48.5 ஓவரில் 9 விக்கெட்டை இழந்து 213 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

ஆட்டநாயகனாக ரோகித் சர்மா தெரிவானார்.

# அமெரிக்காவுடனான அரசியல் பிரச்சினை உதவித் திட்டங்களைப் பாதிக்கமாட்டாது

## என்கிறது யூ.எஸ்.எயிட்.

(கொழும்பு)

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான அரசியல் பிரச்சினை, இலங்கைக்கான அமெரிக்க உதவிமீது தாக்கம் செலுத்தாது என சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகம் கூறியுள்ளது.

யூ.எஸ்.எயிட்டின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் கலந்து கொண்டபோது யூ.எஸ். எயிட்டின் இலங்கைக்கான பணிப்பாளர் பெட்னரிடம் யூ.எஸ்.எயிட் உதவிகளை ஒதுக்கும்போது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள் கருத்தில் கொள்ளப்பட்டனவா என வினவப்பட்டது.

இதற்கு பதிலளிக்கும்போது அப்படி ஏதும் இல்லை, நாம் நல்லிணக்கம், புனருத்தாரணம் பற்றி அக்கறையாக உள்ளோம் என அவர் கூறினார்.

அண்மையில் கொண்டுவரப்பட்ட, கம்பனிகளை சுவீகரிக்கும் சட்டம் தொடர்பில் கேட்டபோது எதிர்காலம்பற்றி ஊகிப்பதை நான் விரும்பவில்லை. அமெரிக்க முதலீட்டின் மீது இந்த சட்டத்தில் தாக்கம் பற்றி கருத்துக் கூற விரும்பவில்லை என அவர் கூறினார்.

## இடைக்காடு..

நேற்றைய தினம் 455 குடும்பங்களைச் சேர்ந்த 1531 பேர் மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

இடைக்காடு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 116 குடும்பங்களை சேர்ந்த 442 பேரும், வளலாய் கிராம உத்தியோகத்தர் பிரிவில் 339 குடும்பங்களைச் சேர்ந்த 1089 பேரும் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இந்த நிகழ்வின் போது யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மற்றும் யாழ். மாவட்ட அரச அதிபர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## அரசின் செயலை...

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களும், இடதுசாரி கட்சிகளும், மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயற்பாடுகளை கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுலோக அட்டைகள், பதாதைகளை கைகளில் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் மக்கள் வரவு - செலவு திட்டத்தில் நிவாரணங்கள், சலுகைகள் வழங்குமாறு கோஷம் எழுப்பினர். அத்துடன் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவை விடுதலை செய், பறிமுதல் சட்டமூலத்தை இரத்துச் செய் என்று எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன, ஜனாநாயக மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் குமரகுருபரன் ஆகியோர் உட்பட முக்கிய பிரமுகர்கள் பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஐ.தே.கட்சியின் நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பி மற்றும் அனோமா பொன்சேகா கலந்துகொள்ளவில்லை.



# நாடாளுமன்ற அமைதியின்மை விசாரணை முடிவு வெளிவந்தது

நேற்றைய தினம் 2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது நாடாளு மன்றத்தில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முடிவை சபா நாயகர் சமல் ராஜபக்ஷ நேற்றையதினம் வெளியிட்டார்.

எதிர்கட்சி உறுப்பினர்கள் சிலர் பதாதைகளை காட்சிப்படுத்தியதை அடுத்தே இந்த அமைதி யின்மை ஏற்பட்டதாக சபாநாயகர் குறிப்பிட்டார்.

இவ்வாறான நிலைமை நாடாளுமன்றத்தின் கௌரவத்தை பாதிப்பதாகவும், நாடாளுமன்ற உறுப்பி னர்களின் பாதுகாப்பிற்கு சிக்கல்களை தோற்று விப்பதாக அமைவதாகவும் சபாநாயகர் தெரிவித்தார்.

வரவு செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்ட சந்தர்ப் பத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் செயற்பாடுகள் விரும்பத்தகாத வகையில் காணப் பட்டதாகவும் அவர் கூறினார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தாமும், பிரதி சபா நாயகரும் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப் படையில் பிரதி அமைச்சர் சரண குணவர்த்தன விற்கு ஒருவார காலம் நாடாளுமன்ற அமர்வுக ளில் பங்கேற்கத் தடை விதிக்கத் தீர்மானிக்கப்பட் டதாக அவர் தெரிவித்தார்.

இந்தத் தீர்மானத்தினை சபை முதல்வர் நாடாளு மன்றத்தில் முன்வைப்பார் என சபாநாயகர் குறிப் பிட்டார். இதன் பின்னர் பிரதி அமைச்சர் சரண குணவர்த்தன ஒருவார காலம் நாடாளுமன்ற அமர் வுகளில் கலந்துகொள்வதற்கு தடைவிதிக்கும் பிரேரணை, சபை முதல்வர் நிமல் சிறிபால டி சில்வா வினால் முன்வைக்கப்பட்டது. இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்னர், எதிர் கட்சியின் கொறடா ஜோன் அமரதுங்க அந்த தீர்ப்பை வரவேற்று கருத்து வெளியிட்டார். சபாநாயகரின் நடவடிக்கையை வரவேற்பதாகவும் இதன்போது எதிர்க்கட்சியின் பிரதம கொறடா குறிப்பிட்டார்.

# வட, கிழக்குப் பகுதிகளிலேயே அதிகளவிலான மின் திருட்டு

## என்கிறார் அமைச்சர் சம்பிக்க

(கொழும்பு)

வருடாந்த மின் திருட்டினால் இலங்கை மின்சார சபை 6 பில் லியன் ரூபா நஷ்டத்தை எதிர்கொள் வதாக அமைச்சர் சம்பிக்க ரண வக்க நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

நாட்டின் மொத்த மின் உற்பத் தியில் 4 வீதம் இவ்வாறு திருட்டுப் படுகிறது. இதன் பெறுமதி சமுர்த்தி திட்டத்தால் மக்களுக்கு வழங் கும் தொகையைவிட அதிகமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கிலேயே அதிக மான மின் திருட்டு இடம்பெறுவ தாக அவர் கூறியுள்ளார்.

அத்தோடு மொத்த மின் உற் பத்தியில் 87 வீதத்திற்கு மட்டுமே பட்டியல் இடப்படுகிறது எனவு மீதமுள்ள 13 வீதத்திற்கு கண குகளோ பட்டியலோ கிடைப்ப எனவும் அவர் சுட்டிக் காட் யுள்ளார்.

கடந்த காலங்களில் நாட்டி நீரேந்து பகுதிகளில் போதி மழை கிடைக்கவில்லை. எ னும், தொடர்ச்சியான மி வழங்கலை உறுதிப்படுத்துவத மின்சார சபை பல நடவடிக்கைக எடுத்துள்ளது எனவும் அவர் குறி பிட்டார். ஐ.தே.க எம்.பி. புத்தி பத்திரண நாடாளுமன்றத்தில் எழு பிய கேள்வி ஒன்றுக்கு பதி அளிக்கும்போதே அமைச்சர் இ கருத்துக்களை வெளியிட்டா

# கைதாகி மரணமான இளைஞரின் சடலம் அனுராதபுர வைத்தியசாலையில்

(கொழும்பு)

சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின் மரணம் அடைந் ததாகக் கூறப்பட்ட இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைக் காக அனுராதபுர வைத்தியசாலை க்கு பொலிஸாரினால் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக உறவினர் கள் தெரிவித்தனர்.

புன்னாலைக் கட்டுவன் தெற் கில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம ஒன்றுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் புன்னாலைக கட்டுவன் தெற்கைச் சேர்ந்த மன நோயாளி என கூறப்படும் சும னன் (வயது 28) என்பவர் கடந்த திங்கட்கிழமை 21 ஆம் திகதி பொலி ஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இவர் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சியிலுள்ள குளத்தில் சடலமாக காணப்பட்டதாகக் கூறி கிளிநொச்சி வைத்தியசாலை யில் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த சடலத்தை கிளிநொ ச்சி பதில் நீதிபதி விஜயலட்சுமியி னால் மேற்கொள்ளப்பட்ட மரண விசாரணையைத் தொடர்ந்து சட லத்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படை த்து பிரேத பரிசோதனை மேற் கொள்ளும்படி அவர் உத்தர விட்டார்.

இந்நிலையில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை சடலம் யாழ். போதனா வைத்தியசா லைக்கு கொண்டுவரப்பட்டு பிரேத பரிசோ தனை மேற்கொள்ளப் படும் என எதிர்பார்த்து உறவி னர்கள் இருந்தனர். ஆனால் சடலம் அனுராதபுர வைததிய சாலைக்கு கொண்டு செல்லப் பட்டு பிரேத பரிசோதனைக்கு உள்ளாககப்பட்டுள்ளதாகவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட நபருடன் கைது செய்யப்பட்ட ஏனைய சந்தேக நபர்கள் நான்கு பேரும் கடந்த சனிக்கிழமை இரவு மல்லாகம் நீதிமன்ற நீதிபதி முன்னிலை யில் சமர்ப்பிக்கப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

# பேஸ்புக் குற்றச் செயல்கள் 1600 இற்கு மேல் முறைப்பாடு

பேஸ்புக் குற்றச்செயல்கள் தொடர்பாக இதுவரை 1600 இற்கு அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலங்கை தகவ அவசர அழைப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

போலியான பேஸ்புக் முகவரி தொடர்பாக அதிகளவு முறை பாடுகள் கிடைத்துள்ளதாக சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறி யலாளர் ரோஹன பல்லியகுரு குறிப்பிட்டார். தமக்கு கிடைத்த முறை பாடுகளுக்கு அமைய போலியான பேஸ்புக் முகவரிகளை இடை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலு தெரிவித்தார்.

இவ்வாறான போலி முகவரிகளைக்கொண்ட பேஸ்புக் தொட பாக ABUSE@CERT.GOV.LK என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகவு 0112 691 692 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவும் அறிவிக் முடியும் என ரோஹன பல்லியகுரு மேலும் கூறினார்.

# இந்தியாவிலிருந்து இறக்குமதியான 22,500 தேங்காய்கள் அழிப்பு

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 22,500 தேங்காய் கள் கடலில் கொட்டி அழிக்கப்பட்டதாக உள்நாட்டு வர்த்தக அமைச்சர ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் நேற்று ஒப்புக் கொண்டார். இத்தேங்காய்களின் பெறுமதி 6 இலட்சத்து 88 ஆயிரத்து 506 ரூபாவாகும்.

கடந்த வருடம் உள்ளூர் சந்தையில் தேங்காய்களுக்கு தட்டுப்பாடு நிலவியபோது இந்தியாவிலிருந்து தேங்காய் இறக்குமதி செய் வதற்கு கட்டளை கொடுக்கப்பட்டதாகவும் ஆனால் அத்தேங்காய் இலங்கையை அடைந்தபோது நாட்டின் தேங்காய் தட்டுப்பாடு நீங்கியி ருந்ததாகவும் அவர் தெரிவித்தார். இதனால் உள்ளூர் உற்பத்தியா ளர்களை பாதிக்கும் என்பதால் அத்தேங்காய்கள் அழிக்கப்பட்ட தாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறினார்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் ஜோன்ஸ்டன பெர்னாண்டோ இவ்விபரங்களை வெளியிட்டார்.

இது அபத்தமான நடவடிக்கை எனக் கூறிய தயாசிறி ஜயசேகர எம்.பி. "வேடிக்கையான அரசாங்கம் இது. எதிர்காலத்தில் இவர்கள் கோழிகளையும் இப்படி இறக்குமதி செய்து அழிப்பார்கள்" என கூறினார்.

# 25 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் பொலிஸா ருடன் மின்சார பரிசோதகர்கள் இணைந்து நடத்திய தேடுதலின் போது நேற்று மாத்திரம் 25 சட்டவிரோத மின் பாவனையா ளர்கள் அகப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப் பட்டவர்கள் இன்று யாழ். நீதி வான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத் தியுள்ளனர். (எப்.எஸ்)

## சிறைக்கைதிகள் மீதான தாக்குதல்

# ஒளிப்பதிவு செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பிய சம்பவம் குறித்து விசாரணை

(கொழும்பு)

அனுராதபுரம் சிறைச்சாலை யில், அரசியல் கைதிகள் மீது சிறைச் சாலை அதிகாரிகள் தாக்குதல் நடத்திய சம்பவத்தை அதி நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய தொலை பேசியில் ஒளிப்பதிவு செய்து, வெளி நாடுகளுக்கு அனுப்பிய சம்பவம் குறித்து, உடனடியாக விசார ணைகளை ஆரம்பிக்குமாறு சிறைச சாலைகள் ஆணையாளர் பி.டபிள்யூ. கொடிப்பிலி அனுராதபுரம் சிறைச சாலை அத்தியட்சகருக்கு உத்தர விட்டுள்ளார்.

அனுராதபுரம் சிறைச்சாலையில 53 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்க ளில் சிலரை சிறையதிகாரிகள் கட்டி வைத்து தாக்குவது போன்ற காட் சிகள், வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

சந்தேக நபர்களான இந்த அரசி யல் கைதிகள், கடந்த 27 ஆம் திகதி மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க உள்ளதாக கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட தேடு தலில், 19 கையடக்க தொலை பேசிகள் கைப்பற்றப்பட்டன. இ ற்றில், 4 தொலைபேசிகள் 3 தொழில்நுட்பத்தை கொண்டவை என கண்டுபிடிக்கப்பட்டுள்ள

சந்தேக நபர்கள் அதிகாரி ளின் தேடுதல் நடவடிக்கைக் எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தம்மை சிறையதிகாரிகள் சித்தர தைக்கு உட்படுத்துக்கின்றன என வெளிகாட்டும் வகையில் வீடியோ காட்சிகள் அனுப்பப டுள்ளதாக அதிகாரிகளுக்கு அறி கிடைத்துள்ளதாக சிறைச்சாலை தரப்பினர் தெரிவித்துள்ளனர்

சந்தேக நபர்கள் செய்ம தொழிற்நுட்பத்தின் ஊடாக கை டக்க தொலைபேசிகளை பய படுத்தி, இந்த வீடியோ காட்சிகளை அனுப்பியுள்ளனர் எனவும் தகவ கிடைத்துள்ளதாகவும் அந்த தொலை பேசிகளை கண்டுபிடிக்க விசே தேடுதல்களை ஆரம்பித்துள்ளத கவும் அதிகாரிகள் தெரிவித்தன

# பதவி வெற்றிடம்

**கணக்குப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் தகுதியா னவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.**

| | | |
|---|---|---|
| **கல்வித் தகைமை** | : | **க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணக்கியலில் விசேட சித்தியுடன் வர்த்தகம் உட்பட 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.** |
| **வயதெல்லை** | : | **25 - 50 வருடங்கள்** |
| **ஏனைய தகைமைகள்** | : | **ஆங்கில மொழியில் தேர்ச்சியுடைய வராகவும், மேற்கூறப்பட்ட பதவிக் கான முன் அனுபவம் மற்றும் கணினி அறிவுடையவராகவும் இருத் தல் வேண்டும்.** |

**தகுதியுடையோர் சுய விபரத்துடன் கூடிய விண்ணப்பங்களை 30.11.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.**

**ஆளணி முகாமையாளர்**
**தினமுரசு காரியாலயம்,**
**இல: 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

(இ)

# பொலிகண்டியில் திருட்டு திருடர்களைத் தேட வலைவீச்சு

சின்னவலை பொலிகண் டிப் பகுதியில் உள்ள வீடொன் றில் கூரையைப் பிரித்து உள்நு ழைந்த கொள்ளையர் 10 பவுண் நகை மற்றும் 5000 ரூபா பணத் தையும் கொள்ளையடித்துள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது. நேற்று முன்தின்ம இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் வீட்டு உரிமை யாளராகப் பீட்டர் மரியநாயகம தனது தொழில் நிமிர்த்தம் வெளி யில் சென்றவேளை கொள்ளையர களால் இவரது வீடு கொள்ளை யடிக்கப்பட்டுள்ளது. வீட்டில் உள்ளிறங்கிய கொள்ளையர் மேற்படி பொருட்களைக் கொள் ளையடித்த பின்னர் கைப்பை மற்றும் உடுப்புக்களை வெளி யே வீசிவிட்டு சென்றுள்ளனர். இச சம்பவம் தொடர்பாக வல்வெட டித்துறை பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது. (116)

# மரண அறிவித்தல்

**உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், நாகம்மாள் வீதி உடு விலை வசிப்பிடமாகவும் கொண்ட அகத்தியன் - இராசப்பு நேற்றைய தினம் காலமானார்.**

**அன்னார் காலஞ்சென்ற அகத்தியன் - லட்சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், கனகமணியின் அன்புக் கணவரும், தருமராசா (ரவி)வின் அன்புத் தந்தையும், ரதிமலரின் மாமனாரு மாவார்.**

**அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00மணியளவில் தகனக் கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**நாகம்மாள் வீதி,** — **தகவல்:**
**உடுவில், சுன்னாகம்.** — **குடும்பத்தினர்**

(இ)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 நவம்பர் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.